# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் வெள்ளி, செப்டம்பர் 14, 2018. இதழ் - 30



அரங்கம் பத்திரிகை மட்டுநகரில் கிடைக்கும் இடம்

EAST LINK AGENCY POST OFFICE

196, திருமலை வீதி, மட்டக்களப்பு.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள் இது இலவசம்




**மட்டக்களப்பின் மலபார்கள்**

வான்கூன்ஸ் மட்டக்களப்பு மலபார்கள் அதாவது தமிழர்கள் பற்றி சொல்வதை இந்த வாரம் பார்க்கலாம்.

பக்கம் - 07



**தற்கொலையை தடுப்பது எப்படி?**

மனச்சோர்வுடைய சிலர் நோயின் கடுமையினால் எதுவும் கதைக்காமல்,


பக்கம் - 14



**யானைப்படையை விரட்டச் சென்ற மட்டக்களப்பு வீரப்படை!!!**

கிரான் பாலத்தடியிலிருந்து கிண்ணயடிக்குச் செல்லும் கிறவல் வீதியூடாகத் திரும்பும்போது,

பக்கம் - 03



**உங்கள் வீட்டுக்கு வாரத்தில் எத்தனை தடவை குப்பை வண்டி வரும்**

பக்கம் - 09





# ஐநா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தில் கூறப்பட்டவற்றை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும்

போர்க்கால மனித உரிமை மீறல்கள் குறித்து ஐநாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தில் கூறப்பட்ட விடயங்களை அமுல்படுத்துவதை இலங்கை விரைவுபடுத்த வேண்டும் என்று ஐநா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இலங்கைக்கான குழுவினால் சமர்பிக்கப்பட்ட அறிக்கையில் பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.

இந்தக் குழுவில் ஜேர்மனி, மசிடோனியா, மொண்டனேக்ரோ, மற்றும் பிரிட்டன் ஆகியன இடம்பெறுகின்றன.

இப்போதுள்ள வலிமையான தலைமையின் கீழ் ஒரு தெளிவான கால எல்லைக்குள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைவாக அமுல்படுத்துவதன் மூலம், இலங்கை மக்களுக்கு நல்லிணக்கத்தையும், சுபீட்சத்தையும் இலங்கை அரசாங்கம் ஏற்படுத்த முடியும் என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

தேசிய நல்லிணக்கத்தையும், அமைதியை மேம்படுத்துவதற்கான திட்டத்தையும் தீவிரப்படுத்தும் நோக்கில் காணாமல் போனோருக்கான அலுவலகத்தை அமைத்தமை உட்பட பல அண்மைக்கால இலங்கையின் நடவடிக்கைகளை தாம் வரவேற்பதாக அந்த குழு கூறியுள்ளது. வடக்கில் இராணுவத்தின் வசம் இருந்த காணிகள் சில விடுவிக்கப்பட்டதையும் அது வரவேற்றுள்ளது.

இருந்தபோதிலும் அமைதிக்கான திட்டம் இன்னமும் தாமதமாகவே செயற்படுவதாகவும் அந்தக் குழு கூறியுள்ளது. அது நல்லிணக்கத்தை பாதித்துவிடும் என்றும் அந்தக் குழு எச்சரித்துள்ளது.

தேசிய மட்டத்தில் ஒரு பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறை அவசியம் என்றும் அது வலியுறுத்தியுள்ளது. அடுத்துவரும் மார்ச் மாதத்தில் இலங்கையின் பதில் நடவடிக்கைகளை ஐநா மனித உரிமைகள் குழு மறுஆய்வு செய்வதற்கு முன்னதாக இலங்கை இந்த விடயங்களை விரைவுபடுத்த வேண்டும் என்று பிரிட்டன் உட்பட குழுவின் ஏனைய நாடுகள் கேட்டிருக்கின்றன.

# கிழக்கின் குரல் உரத்து ஒலிக்கட்டும்!

அரங்கம் தனது 30வது இதழை எட்டியுள்ளது.
வாசகர் மட்டத்தில் அது நல்ல வரவேற்பையும் பெற்றிருக்கிறது.
மக்களை வழி நடத்தும் நோக்கில் நாம் தரும் தகவலும் கருத்துக்களும் பொதுமக்களை வெகுவாக கவர்ந்துள்ளன. இதற்காக சகல தரப்பினருக்கும் நாம் எமது நன்றியை தெரிவிக்கின்றோம்.
கிழக்கில் ஒரு பத்திரிகை இல்லை என்ற நிலையை இது தற்போது தகர்த்திருக்கிறது.

அதேவேளை விரைவில் அரங்கம் தினசரி செய்திகளை இணையத்தின் மூலமாகவும், பத்திரிகை மூலமாகவும் வெளியிட நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.
முதல் நடவடிக்கையாக இணைய தினசரி செய்திகள் உலகெங்கும் விரைவில் வெளிவரவிருக்கின்றன. இவை தொடர்ந்தும் இலவசமாகவே வரும்.

அதேவேளை, எமது மண்ணின் வாசகர்களும், புலம்பெயர் உறவுகளும் எமது பணிதொடர தமது பங்களிப்புகளை விளம்பரங்கள், பக்க அனுசரணை, மின்னிதழ் சந்தா ஆகியவற்றின் மூலம் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

புலம்பெயர் நாடுகளில் பத்திரிகையை நேரடியாக பெற விரும்பும் வாசகர்கள் எம்மை தொடர்புகொள்ளவும்.

கிழக்கின் குரலை உலகெங்கும் உரத்து ஒலிக்கச் செய்வோம். அதற்காக அனைவரும் ஒன்றாகக் கைகோர்ப்போம்.

--- சீவகன் பூபாலரட்ணம்

# அமைச்சர் தயாகமகேயினால் தீர்ந்தது திருக்கோவில் ஆதார வைத்தியசாலைப்பிரச்சினை!



(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் ஆதாரவைத்தியசாலையில் உள்ளகக்கட்டுமானத்தில் நிலவும் சமகாலப்பிரச்சினையை சமுகநலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர் தயாகமகே நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புகுழுக் கூட்டத்தில் சாதூரியமாகத் தீர்த்துவைத்தார்.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று(13) வியாழக்கிழமை அம்பாறை மாவட்டசெயலகத்தில் அரசாங்க அதிபர் டபிள்யூ பண்டாரநாயக்கவின் ஏற்பாட்டில் இணைத்தலைவர்களான அமைச்சர் தயாகமகே, பிரதியமைச்சர் பைசால் காசிம் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம்.மன்சூர், கே.கோடீஸ்வரன், முன்னாள் மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை, கிழக்குசபாநாயகர் சந்திரதாசகலப்பதி விமலவீரதிசாநாயக்க ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

தொடர்ச்சி... (பக்கம் -07 )




# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டு(முகம்) பகுதி 18

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணண்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முன்வைத்த தென்கிழக்கு மாகாண யோசனைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவு வழங்குவதாக அறிவித்த பத்திரிகை அறிக்கைச் செய்திகளைப் படித்துவிட்டு விசனமடைந்த இப்பத்தியாளர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய தலைவர் அமரர் மு.சிவசிதம்பரம் அவர்களைக் கொழும்பில் சந்தித்து, உத்தேச தென்கிழக்கு அலகு யோசனையில் உள்ள அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்குப் பாதகமான விடயங்களையிட்டு அவரின் கவனத்திற்கு கொணர்ந்தார்.

அப்போது அமரர் மு.சிவசிதம்பரம் அவர்கள் இப்பந்தி எழுத்தாளரிடம் " பத்திரிகைச் செய்திகளைப் பெரிதுபடுத்த வேண்டாம். நாங்கள் (தமிழர் விடுதலைக்கூட்டணி) அம்பாறை மாவட்டத் தமிழர்களைக் கைவிடமாட்டோம்." என்று கூறினார். இச்சந்திப்பிலிருந்து விடைபெறும் போது இப்பந்தி எழுத்தாளர் அவரிடம் கூறிய கூற்று யாதெனில் 'பத்திரிகைச் செய்திகளை விட உங்கள் வாயிலிருந்து வரும் வார்த்தைகளையே நாம் நம்புகின்றோம். தென்கிழக்கு மாகாணசபை சம்பந்தமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உடன் ஏதாவது பேச்சுவார்த்தைக்குச் செல்ல முன்பு தயவு செய்து அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்துடன் கலந்துரையாடவும்; மட்டுமல்ல அத்தகைய பேச்சுவார்த்தைகளில் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள வேண்டும்" என்பதாகும்.

ஆனால் என்ன நடந்தது?

சில வாரங்களில் பின்னர் கொழும்பிலே, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், எஸ்.ஜே.வி செல்வநாயகம் (தந்தை செல்வா ) அவர்களின் நூற்றாண்டு விழாவினை வெகு விமர்சையாக ஏற்பாடு செய்து, கொழும்பு – 01, " கிரான் ஈஸ்ட்டன் " ஹோட்டலிலே நடைபெற்ற இந்நிகழ்வுக்கு திரு.மு.சிவசிதம்பரம் அவர்கள் அதிதியாக அழைக்கப்பட்டுக் கிரீடம் சூட்டப்பெற்று " விடுதலைச் சங்கம்" எனப்பட்டமும் சூட்டப்பெற்றார். இந்தக் கௌரவிப்பில் பூரிப்படைந்த சிவசிதம்பரம் அவர்கள், தன்நிலைமறந்து அக்கூட்டத்தில் பேசும் போது " ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அரசியல் அரங்கிலே முன்வைத்துள்ள தென்கிழக்கு மாகாணசபை யோசனையை நிபந்தனையின்றித் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரிக்கிறது. இதனை ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று முழங்கினார்.

இதனால் அதிர்ச்சியும், ஆத்திரமும் அடைந்த இப்பந்தி எழுத்தாளர் தென்கிழக்கு மாகாணசபைக்கு எதிராகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தவறுகளைச் சுட்டியும் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்தியும் வீரகேசரி மற்றும் தினக்குரல் பத்திரிகைகளில் தொடர்கட்டுரை எழுதினார். இக்கட்டுரைகள் வெளிவந்ததன் பின்பு தழிழர் விடுதலைக் கூட்டணி தென்கிழக்கு மாகாணசபை யோசனையை ஆதரிப்பதை அடக்கி வாசிக்கத் தொடங்கியது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயற்பாட்டு அரசியலை நுட்பமாக ஆராய்வோமானால் மேற்கூறப்பட்ட நிகழ்வு அதன் தலைவர் எம்.எச்.எம் அஸ்ரப் அவர்களின் அரசியல் தந்திரோபாயமும் தனது இலக்கை நோக்கியதோர் அரசியல் தயார்ப்படுத்தலும் ஆகும் என்பதைப் புரிந்துகொள்ளலாம். அவரைக் குறை கூறமுடியாது. அவர் தனது சமூகத்திற்குத் தேவையான மக்கள் மைய அரசியலை, செயற்பாட்டு அரசியலை முன்னெடுத்தார். தமிழர்தம் அரசியல் தலைமையோ தேர்தல் மைய அரசியலை "ஏட்டுச்சுரைக்காய்" அரசியலையே முன்னெடுத்தது. இன்றும் கூட இந்த நிலைமைதான் தொடர்கிறது.

கல்முனை விவகாரத்திற்கு மீண்டும் வரலாம்.

28.07.1993 அமைச்சரவைத் தீர்மானத்தின்படி பிரதேச செயலகமாகத் தரமுயர்தப்பெற்ற கல்முனைத் தமிழ்ப்பிரதேச செயலகப் பிரிவான கல்முனை வடக்குப் பிரதேச செயலகப்பிரிவு முழுமையான பிரதேச செயலகமாக அதிகாரமளிக்கப்படாமல் - எல்லைகள் வகுக்கப்பெற்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாமல் - அதிகாரமற்றதோர் உபபிரதேசசெயலகப் பிரிவாகப் பெயரளவிலேயே – கல்முனைத்தமிழர்க்கு கண்துடைப்பு நடவடிக்கையாகவே தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருந்தது. இப்பிரிவு சட்டரீதியாகத் தரமுயர்த்தப்படாமல் கல்முனைத்தமிழர்கள் தங்களுக்கென்று தனியான தமிழ்பெரும்பான்மை உள்ளூராட்சி அலகொன்றினைப் பெற்றுக்கொள்ளும் விடயமும் கிணற்றிலே போடப்பட்ட கல்லாகக் கிடந்தது. தமிழர் தம் அரசியல் தலைமை இது குறித்த எந்த அக்கறையும் இல்லாதிருந்தது.

1994ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் யாழ்மாவட்டத்தை சேர்ந்த வெளிஆளான மாவை சேனாதிராசா தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைமை வேட்பாளராக

தொடர்ச்சி... (பக்கம் -00 )

## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

## பிரதேச இலக்கியப் படைப்புலகில் மக்களையும் இயற்கையையும் ஆழ்ந்து நேசிக்கும் எஸ்.எல்.எம் ஹனிபா



எஸ்.எல்.எம் ஹனீபா

சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டினை 2011 ஜனவரி மாதம் கொழும்பில் நடத்துவதற்கு முன்பதாக 2010 டிசம்பரில் கிழக்கிலங்கையில் மாநாடு தொடர்பாக தகவல் அமர்வு நடத்துவதற்காக எமது குழுவிலிருந்த இலக்கிய நண்பர்கள் பூபாலசிங்கம் ஸ்ரீதர்சிங் மற்றும் அஷ்ரப் சிகாப்தீன் ஆகியோருடன் மட்டக்களப்பிற்கு சென்றிருந்தேன்.

ஓட்டமாவடியில் அஷ்ரப் சிகாப்தீனின் சகோதரி வீட்டில் தங்கியிருந்தோம். அந்தக்குடும்பத்தின் தலைவர் பாடசாலை அதிபர். அத்துடன் கலை, இலக்கிய ஆர்வலர். அவரும் அவரது குடும்பத்தினரும் எம்மை நன்கு உபசரித்தனர்.

நாம் வந்திருக்கும் செய்தியறிந்த ஒருவர் திடீரென்று வந்தார். அவரை நான் அதற்கு முன்னர் சந்தித்திருக்கவில்லை. அவரே அருகில் வந்து தன்னை " எஸ்.எல்.எம். ஹனீபா" என்று அறிமுகப்படுத்திக்கொண்டார்.

" யார்... மக்கத்துச்சால்வை ஹனிபாவா...?" எனக்கேட்டேன். " ஓம்" எனச்சொல்லி என்னை அணைத்துக்கொண்டார்.

1946 ஆம் ஆண்டு மீராவோடையில் கடலை நம்பிய தந்தைக்கும் மண்ணை நம்பிய தாயாருக்கும் பிறந்திருக்கும் ஹனிபாவின் எழுத்துக்களும் அவரது நேரடி உரையாடல் போன்று சுவாரஸ்யமானது.

கிட்டத்தட்ட கரிசல் இலக்கிய வேந்தர் கி. ராஜநாராயணனின் வாழ்க்கையைப் போன்றது. பந்தாக்கள், போலியான வார்த்தைப்பிரயோகங்கள் அற்ற வெகு இயல்பான மனிதர். அந்த முதல் சந்திப்பிலேயே என்னை மிகவும் கவர்ந்தார்.

அவரது உரையாடலிலிருந்து அவர் ஒரு சிறந்த கதை சொல்லி என்பதை புரிந்துகொள்ளமுடியும். 1992 இல் இவருடைய "மக்கத்துச்சால்வை" கதைத்தொகுப்பு வெளியானது. குறிப்பிட்ட தலைப்பும் இவரது பெயரை இலக்கிய உலகில் தக்கவைத்து, " மக்கத்துச்சால்வை ஹனிபா" என்று வாழவைத்துக்கொண்டிருக்கிறது.

அந்தத்தொகுப்பில் அவருடைய என்னுரை, கொடியேற்றம் என்ற தலைப்பில் இவ்வாறு ஆரம்பிக்கிறது:

"அந்த நாள்கள் பற்றிய நினைவுகளும், இந்தச் சிறுகதைத் தொகுப்பு வேலைகளிலே ஈடுபட்டிருக்கும்பொழுது, ஏன் வளைய வலம் வரவேண்டும்?
இரவின் ஏதோ ஒரு வேளையில் - அதை வைகறை என்றும் சொல்ல ஒண்ணா-உம்மா எழும்பிடுவா. குப்பிலாம்பின் துணையோடு உம்மாவின் தொழில் துவங்கும். நித்திரையில் ஊருறங்கும். அதனை ஒட்டில் களிமண்ணை "தொம்" மென்று போட்டு உம்மா கலைப்பா. கொஞ்ச நேரத்தில் ஒட்டில் குந்திய களிமண் "தொம்" அழகான சட்டியாக, பானையாக, குடமாக உருவெடுக்கும். அந்த அதிசயத்தை நாடியில் கை கொடுத்துப் பார்த்திருப்பேன்.

அதிகாலை நான்கு மணிக்கே எழும்பிவிடும் அந்தப் பழக்கம் இன்றுவரை களிமண்ணைப்போலவே என்னில் ஒட்டிக்கொண்டது. வாப்பாவும் உழைப்பாளிதான். அவரும் வெள்ளாப்பில் எழும்பிவிடுவார். ஊரிலிருந்து ஐந்து மைல்களுக்கப்பால் கடற்கரை. அங்கேதான் வாப்பா மீன் வாங்கிவரப் போவார்.

அவர் தோளில் கமுகு வைரத்தின் காத்தாடி. அதன் இரு முனைகளிலும் கயித்து உறியில் பிரம்புக் கூடைகள் தொங்கும். "கிறீச் கிறீச்" என்ற ஓசையுடன் வாப்பாவின் தோளில் கிடக்கும் காத்தாடியின் கூடைகளிரண்டும் கூத்துப் போடும்.

கூடைக்குள் பொன்னிவாகை இலையை நீக்குப்பார்த்தால்....வெள்ளித் துண்டுகளாக மீன்கள் "மினுமினு"க்கும்.

எங்கள் ஊரில், அந்தக் காலத்தில், "அஞ்சாப்பு"வரை படித்த நான்கைந்து பேரில் வாப்பாவும் ஒருவர். அவர் எழுத்து குண்டு குண்டாக அழகாக இருக்கும். நாள் தவறாமல் பத்திரிகை வாசிப்பார்.... வாசலில் தெங்குகள். காற்றில் கலையும் ஓலைக் கீற்றுகளுக்கிடையில் நிலவு துண்டு துண்டாகத் தோட்டுப் பாயில் கோலம் போடும். காசீம் படைப்போர், சீறாப்புராணம், பெண்புத்திமாலை, ராஜநாயகம் என்றெல்லாம் வாப்பா ராகமெடுத்துப் படிப்பார். வாப்பாவைச் சுற்றிப் "பொண்டுகள்" வட்டமிட்டிருப்பர்.... வாப்பாவிலும் பார்க்க அதிகமாக வாசிக்கும் பழக்கம் எனக்கும் உண்டு. "

இவ்வாறு தொடங்கும் ஹனிபாவின் என்னுரை, மேலும் பின்வருமாறு தொடருகின்றது:

என்னைச் சூழவும் வாழுகின்ற ஆயிரக்கணக்கான மக்கள், அறியாமையோடும் வறுமையோடும் வானம்பார்த்த பூமியை வைத்துக்கொண்டு மாரடிக்கிறார்கள். இந்த மக்களை மூலதனமாகக் கொண்டு ராஜதர்பார் நடாத்துகின்ற அரசியல் புரோக்கர்கள் ஏழைகளைச் சுரண்டி வாழும் தனவந்தர்கள். இந்த முரண்பாடுகளின் கோட்டமோ நான் வாழும் கிராமம். இந்த முரண்பாடுகளுக்கு மத்தியிலே அவலப்படும் மக்களுடைய மானுஷகத்தினைத் தரிசிப்பது தான் என்

**முருகபூபதி – அவுஸ்திரேலியா**

எழுத்துப் பணி.

"சன்மார்க்கம்" கதை பிரசுரமான காலத்திலேயே சிலர் "ஹனிபாடெ கையெ முறிச்சிப் போடணும்" என்றும் சொம்பினார்களாம். "மருத்துவம்" கதையிலே வரும் டாக்டர் தன் வசமுள்ள "குறடு" கொண்டு என் இரண்டு பற்களையாவது பிடுங்கிவிடவேண்டும் என்று கர்விக் கொண்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. "சமூகப் பிரக்ஞையுள்ள சத்தியக் கலைஞனுக்கு எழுத்து ஊழியமும் ஒரு புனித யுத்தமாக அமைந்துவிடுவது சாத்தியமே.

எழுத்தாளனுடைய வாழ்க்கை முழுத்துவம் பற்றிய தேடலே... இந்தத் தேடலிலே வெற்றி இலேசில் வாய்த்து விடுவதில்லை. வாழ்வின் நாணயம், ரஷனையைப் பெருக்கும் வாசிப்பு, தொடர்ந்த பயிற்சி எனப் பல வந்து பொருந்தவேண்டும்.

குறுக்கு வழிகளும் உண்டு. ஒரு அணியாகத் திரண்டு கொண்டு களத்தில் இறங்க வேண்டும். அப்பொழுது நாம் ஒருவரை ஒருவர் மேதாவியாக்கி, ஒருவர் முதுகை ஒருவர் சொறிந்து.... ஆ! என்னே சுகம். அந்த சுகம் இந்தச் சுகமும் ஒருவகை போதைதான். போதையில் எனக்கு நம்பிக்கையில்லை.

வாழ்கையை கலாபோதையுடன் பார்ப்பதெல்லாம் பாவலா. நான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் கூட

தொடர்ச்சி... (பக்கம் -07 )



*("கிரானிலும் யானைகள் அட்டகாசம்" என்ற அரங்கம் பத்திரிகையின் முன்பக்கச் செய்தியை தொடர்ந்து நடந்த வழிமறிப்புத்தாக்குதல். யாரை யார் வழிமறித்தார்கள் என்பது பற்றிய விபரம் உள்ளே.. -- ஆசிரியர்)*

கிரான் பாலத்தடியிலிருந்து கிண்ணயடிக்குச் செல்லும் கிறவல் வீதியூடாகத் திரும்பும்போது, இரவு ஒன்பது மணியாகிவிட்டிருந்தது. சில நாட்களாக கிரான் ஆற்றைத் தாண்டி ஊருக்குள் நுழைந்து, ஊரின் மேற்குப் பக்கமாக இருக்கும் தென்னந்தோட்டங்களை களோபரப்பட்டுக் கத்திக் கொண்டு, ஓடிய காலடித்தடங்களைக் காணமுடிந்தது. யானைகள் பயந்த சுபாபம் உடையன என்பது ஆச்சரியமான விடயம்தான். அதன் வழியைத் தடைசெய்யாது யானை வெடிகளைப் போட்டால் அது பயந்து ஓடிடும் என்றார் வனசீவராசிகள் பணியாளர். எங்களுடைய வாகனத்தின் சத்தத்திற்குக் கூட அவை பயந்து ஓடும் என்றார். உழவு இயந்திரங்களின் சத்தத்திற்குக் கூட அவை பயந்து ஓடும் என்றார் வனவாசியான நண்பர்.

இப்போது யானைகள் ஆற்றைக் கடந்து ஊருக்குள் வந்துவிட்டன என்பது தெளிவாகியது. அவை ஆறுமணிக்கே ஆற்றைக் கடந்து விடுமாம். அகலமான, திறந்த வெளியான ஆற்றுக்குள் என்றால் யானைகளை இலகுவாக கண்டுபிடித்து விடலாம். ஆனால் பற்றைக் காடுகளுக்குள், இருளில் யானைகள் எங்கே நிற்கும் எண்டு இலகுவாக கண்டுபிடிக்கவும் முடியாது. தேடிப்போனால் அவை எங்களை அடிக்கும் ஆபத்தும் நேரலாம். அதனால் யானைப் பயம் உண்டாகத் தொடங்கியது.

நாங்கள் அந்த இடத்திலேயே தங்கி, யானைகள் மீண்டும் வருகிறதா எனப்பார்ப்பது என்று முடிவெடுத்துத் தங்கிவிட்டோம். யானைகள் பற்றிப் பல கதைகளை எங்களுக்கு தெரியாது. காலையில்தான் தெரிய வந்தது. யானைகள் ஆற்றைக் கடக்காமல் ஒழித்து நின்று, அரவம் அடங்கிய பின் வந்திருக்கின்றன. ஆனால், யானைகள் அறிவுடையன என்பது மட்டும் உண்மை என அறிந்து கொள்ள முடிந்தது.

மறுநாளும் நாங்கள் யானைகளைத் துரத்தப் போனபோது ஒன்பது மணியாகிவிட்டிருந்தது. எங்கு தேடியும் யானைகளைக் காணமுடியவில்லை. அவை பயந்து போய் விட்டன, இனிச் சில நாளைக்கு வராது என்று முடிவெடுத்து வீடு வந்தோம். ஆனால் அவைகள் மாலையிலேயே ஆற்றைக்

**உண்மைக்கதை:**

# யானைப்படையை விரட்டச் சென்ற மட்டக்களப்பு வீரப்படை!!!



அழித்தட்டகாசங்கள் புரிந்து கொண்டிருக்கும் யானைகளைக் கலைத்துக் காட்டுக்கு அனுப்புவதற்கான எங்கள் சாகஸப் பயணத்தின் ஆரம்பமே இது.

யானைகளை விரட்டும் சாகஸப் பயணத்தை மாலை ஆறு மணிக்கு முன்னரே ஆரம்பிக்க வேண்டும் என்ற திட்டமிட்டிருந்தோம். ஆறு மணியளவில்தான் யானைகள் ஆற்றைக் கடக்கும் என்பதனால் அவ்விடத்திலேயே யானைகளை வழிமறித்து, பயமுறுத்தி காட்டுக்குள் திருப்பி அனுப்பிவிடுவது இலகுவானது. அதனால் ஆறு மணிக்கு முன்னரே யானைகள் கடக்கும் ஆற்றோரத்திற்கு செல்ல வேண்டும் என்று திட்டம் போட்டிருந்தோம். தேவையான ஆட்களையும் பொருட்களையும் தேடிக்கொள்வதில் உண்டான காலதாமதங்களால் இரவு ஒன்பது மணிக்குத்தான் கிண்ணையடி வீதிக்கு வரமுடிந்தது.

சில மீற்றர் செல்லும்போதே, "அந்தா நிக்கிது ஆன..." எனப் பயந்து ஓடிவந்த முதியவரை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. பெரிய யானைகளைக் கண்டு பயமுறாதார் யாருளர். இப்போது யானைப் பயம் எங்களைத் தொற்றிக் கொண்டது. யானை துரத்துவதற்கு வந்த வனசீவராசிப் பணியாளர், ஒரு துப்பாக்கியை வைத்திருந்த போதும், அவர் யானைகளைச் சுடப்போவதில்லை என்பது உறுதியான விடயம் எனப் புறப்படும் போதே தெளிவாகிவிட்டிருந்தது. 'யானைகள் கணபதி தெய்யோ, அவை பாவமானவை, அவற்றைச் சுடச் சட்டமில்லை' எனச் சொல்லிக் கொண்டுதான் அவர் வந்தார். யானைகள் அழும். அதைப் பார்க்கப் பாவமாக இருக்கும் என்று வேறு பரிதாபப்பட்டும் பேசினார்.

யானை வெடிகளைப் போட்டுத்தான் யானைகளைக் கலைக்க வேண்டும். யானைகளோடு நன்கு பரிச்சமயான வனவாசியமான நண்பர், இந்த வாகனச் சத்தத்திற்கு யானைகள் ஓடிவிடும் என்று தெம்பூட்டிக் கொண்டிருந்தார்.

யானைகளைத் தேடிச் சென்ற போது அது ஆள் மாறிவிட்டிருந்தது. யானைகளைக் காணாமல் யானை வெடியும் போட இயலாது. அந்த நேரம்தான், ஊரின் பின்பக்கமாக இருந்து "ஆன..ஆன..." எனக் கத்தும் சத்தமும் கேட்டது. ரோச் லைட் வெளிச்சமும் தெரிந்தது. திரும்பி சத்தம் வந்த திசையில் சென்ற போது, யானையைக் கண்டு கத்திவயரைக் காண முடிந்தது. "இந்தா பன மரத்தடியிலிருந்து பனங்கா சாப்பிடுது..." என்றார். ரோச் லைட் வெளிச்சத்தைப் பாச்சியபோது ஒன்றையும் காணோம். அங்கிருந்தும் வேகமாக "ஆள் மாறிவிட்டது" யானைகள். ஆள்மாறுவதிலும் சிறிய பற்றைகளில் ஒழிந்து நிற்பதிலும் யானைகள் பலே கில்லாடிகள் என்றார் வனசீவராசிப் பணியாளர். கூடவே இப்படியான நேரங்களில் இடக்குமுடக்காப் போனால் யானைகள் அடிச்சுத் துவைச்சும் போடும் என்றார்.

இன்னமும் நாங்கள் யானைகளைக் காணவில்லை. சும்மா பயத்திலயும் ஆன..ஆன.. எனக்கத்துவார்கள் என்றார் வனசீவராசிகள் பணியாளர். இறங்கிப் போய் யானைகள் நின்றதாகக் கூறிய பனமரத்தடிக்குப் போய்ப் பார்த்த போது யானைகளின் காலடித்தடங்களைக் காணமுடிந்தது. யானை வந்திருப்பது உறுதியானது. யானைகள் இங்கே அருகில்தான் இருக்கவேண்டும். பரபரப்புடன் தேடத்தொடங்கினோம். அப்போதுதான் அருகிலிருந்த பற்றைக்காடுகள் சரசரக்கத் தொடங்கின. அது யானைதான் எனக்கூறிய வனசீவராசிகள் பணியாளர் வாகனத்தில் ஏறி டோர்ச் லைட்வெளிச்சத்தைப் பாச்சிப் பரந்தடித்தார். உதவியாளர் வெடிகளைத் தயார் படுத்தத் தொடங்கினார்.

வனசீவராசிகள் பணியாளர், 'இந்தப் பக்கம் வெடியைப் போடு' என்றதுதான் தாமதாம் வெடிகள் பீறிட்டுக்கிளம்பின. பற்றைக்காட்டுக்குள் இருந்து பெரும் உருவங்கள் கீச்சிட்டுக் கொண்டு பறந்தன ஆற்றுப்பக்கமாக. நாங்கள் உற்சாகமானோம். ஓடுற யானயைத் துரத்தத் தொடங்கினோம். ஆனால் யானைகள் வேகமாக ஓடுவன. எங்களால் அதன் வாலைக்கூடக் காணமுடியவில்லை.

திரும்பி ஆற்றோரத்திற்கு யானைகள் கடக்கும் அழிப்பாட்டிற்குச் சென்றபோது, யானை பிச்சடிச்சுக் கொண்டு ஓடியிருப்பது தெரிய வந்தது. அங்கு யானைகள் இடறி வனசீவராசிகள் பணியாளரும் வனவாசியான நண்பரும் கூற, பொழுது நகர்ந்தது. அடிக்கடி டோர்ச் லைட் வெளிச்சத்தை காட்டுப்பக்கமாகப் பாச்சி யானைகள் வருகிறதா எனப் பார்த்துக் கொண்டோம்.

இரவு ஒரு மணியிருக்கும். யானைகள் இனி வராது என நம்பி, வீட்டுக்குப் போவம் என வாகனத்தில் ஏறப்போகும் போது, ஊர்ப் பின்பக்கம் இருந்து யானை வெடி ஒன்று வெடித்தது. கூடவே "ஆன..ஆன.." என்ற சத்தமும் கேட்கத் தொடங்கியது. யானைகள் எல்லாமே ஓடவில்லை. சில, எங்களின் பின்புறமாக பற்றைகளுக்குள்தான் இவ்வளவு நேரமும் ஒழிந்திருந்தன என அப்போதுதான் தெரியத் தொடங்கியது. அவை விரண்டு ஓடி வந்தால் எங்களை முட்டி மோதித்தான் செல்ல வேண்டிவரும்!

ஊர்ப்பமாகச் செல்ல கிண்ணையடி கிறவல் வீதிக்கு வந்தபோது, யானைகளை எதிர்கொள்ள வேண்டி வந்தது. மூன்று பெரிய யானைகள் வீதியில். யானை வெடிகளைப் போட்டதினால் அவை பயந்து காட்டுக்குள் செல்ல அப்போதுதான் விதியைக் கடக்கத் தொடங்கியிருந்தன. அப்போதான் நாங்கள் குறுக்கறுத்திருக்கிறோம்.
பிறகென்ன... யானை வெடிகள் ஒன்றன் பின் ஒன்றாகச் சீறிப்பாய யானைகள் வெருண்டோடும் காட்சியைத்தான் காணமுடிந்தது. குழந்தைகள் உரத்துக் கீச்சிடும் பாங்கில் கீச்...கீச் எனக் கத்திக் கொண்டு அந்தப் பெரிய – கரிய யானைகள் வெருண்டோடின ஆற்றுப் பக்கமாக. இந்த யானைகள்தான் சில நாட்களாக ஊரின் பின்புறமாக நடமாடி அச்சுறுத்திக் கொண்டிருந்தன. ஊரின் மேற்குப் பக்கமாக இருக்கும் தென்னந்தோட்டங்களை அழித்து அட்டகாசங்கள் புரிந்து கொண்டிருந்தன. தென்னங் குருத்துக்களைப் பிய்த்துப் போட்டும், வேரோடு சாய்த்தும் போட்டிருந்தன. குழாய்க் கிணறொன்றைக் காலால் நசுக்கி அழிந்திருந்தன. முந்திரி மரமொன்றை தலையால் முட்டிச் சாய்த்திருந்தன. இன்னும் நாலெட்டு வைத்தால் மட்டக்களப்பு – திருமலை வீதிக்கு அவை வந்து விடும். இன்னமும் நாலு எட்டு வைத்தால் ஊர் குடியிருப்பிற்குள் வந்து விடும். ஆனால் எல்லாருமே ஒன்றும் நடவாது என்பது போலவே இருந்தார்கள்.இப்போது யானைகளைக் கலைத்தாகி விட்டது. ஆனால் நாளையும் வரும். எனவே இரண்டு மூன்று நாட்களுக்கு ஆற்றோரத்தில் நின்று திரத்தி விட்டால் பிறகு யானைகள் வராது என்றார் வனசீவராசிகள் பணியாளர். நாளைக்கு ஆறுமணிக்கே வருவோம் என முடிவெடுத்து வீடு வந்த போது இரவு இரண்டு மணியாகிற்று.அதன் பின்னர் யானைகள் வந்தது, தோட்டக் காவலாளி யானை வெடியைப் போட்டுக் கலைத்தது எதுவும் கடந்து, வேறொரு பாதுகாப்பான பாதையில் சென்று, மட்டக்களப்பு – திருகோணமலை வீதிக்கு ஏறி, பின் பாசிக்குடா வீதியைக் குறுக்கறுத்து தென்னந்தோட்டம் ஒன்றிற்குள் புகுந்து அட்டகாசங்கள் புரிந்திருக்கின்றன என்பது காலையில் தெரியவந்தது.

**கிரான் விஜய்**

இன்றைய அனுபவமும் யானைகள் அறிவுடையன என்பது மட்டும் உண்மை என்பதனை அறிந்து கொள்ளச் செய்தது.

## வாழ்க்கைக்கான தொழில் வழிகாட்டல் கண்காட்சி




வாழ்க்கைக்கான தொழில் வழிகாட்டல் கண்காட்சி, மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 17.09.2018ம் திகதி தொடக்கம் 19.09.2018ம் திகதி வரை, காலை 8.30மணி தொடக்கம் மாலை 5.30மணி வரை நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்வி அலுவலக தொழில் வழிகாட்டல் பிரிவு, வேள்ட்விஸன் நிறுவன பட்டிப்பளை அபிவிருத்தி திட்டம் போன்றன இணைந்து இக்கண்காட்சியை ஒழுங்கு செய்துள்ளனர். வாழ்க்கைக்கான தொழில்துறை தெரிவு, கல்விப்பொதுத்தராதர சாதாரணதர பாடத்தெரிவு, கல்விப்பொதுத்தராதர உயர்தரப்பாடத்தெரிவு, பல்கலைக்கழக தெரிவு, வெளிவாரி பட்டப்படிப்பு, ஏனைய பல்கலைக்கழக தெரிவு, துறைசார் சிறப்பு பாடசாலைகள், தொழில்கல்வி வாய்ப்புக்கள், விசேட தேவையுள்ளோருக்கான வாய்ப்புக்கள், நேர்முகத்தேர்வு ஆயத்தமாதல், ஆற்றுப்படுத்தலின் அவசியம், அரசாங்க வட்டி சலுகை கடன்திட்டம் ஆகிய மையங்கள் அமைக்கப்பட்டு இக்கண்காட்சி நடைபெறவுள்ளது.

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்

## இன அழிப்பு மரங்களுக்கும் பொருந்தும் எம்மினத்தை அழித்து நீர் வாழ முடியாது

படுவான் பாலகன்

ஒரு காலத்தில் கூடிக் குலாவி மகிழ்ச்சியாக இருந்தோம். இப்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளோம். ஆங்காங்கு தள்ளித்தள்ளி ஒவ்வொருவர் இருந்து கொண்டிருக்கின்றோம். பலர் அழிக்கப்பட்டுவிட்டனர். எம்மைப்போன்ற பல இனங்களும் அழிக்கப்பட்டுள்ளன. என்னையும் அழித்து விடாதே என சாழம்பை மரம், கண்ணனைப்பார்த்து கூறியது.

சாழம்பை மரத்தினை வெட்டுவதற்கு, கண்ணன் எத்தனித்த போதே, "என்னை அழிக்காதே!, என்கதையை கேட்டுவிட்டு, என்னை கொன்றுவிடு!' என சாழம்பை மரம் கூறிக்கொண்டு, தனது கதையை ஆரம்பித்தது.

'மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள, படுவான்கரைப்பகுதியில், பெரும்பான்மையினராக மரங்கள் என்ற எம்மினமே, வாழ்ந்தன. ஆனால் எம்மை ஈவு இரக்கம் இன்றி பலர் கொன்றுவிட்டனர். அவர்களிலிருந்து உயிர் தப்பிய ஓரிருவரே ஆங்காங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சில இடங்களில் மாத்திரம், கூட்டம் கூட்டமாக வாழ்கின்றோம். மனிதர்களாலேயே நாங்கள் அதிகம் கொல்லப்பட்டோம். மனிதர்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு இயற்கையான நிழலைக் கொடுத்தோம், இயற்கை காற்றையும் வழங்கினோம், உண்பதற்கு பழங்களை, காய்களை, இலைகளை, பட்டைகளை கொடுத்து உதவினோம். நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மருந்தாகவும், பல உயிரினங்களின் உறைவிடமாகவும், மழை பெய்வதற்கு உறுதுணையாகவும், நாம் இறந்த பின்னும் விறகாக, வீட்டிற்கு தேவையான கதவாக, யன்னலாக, கூரைமேய்வதற்கான கைமரங்களாக, அழகுப்பொருட்களாக, மேசை, கதிரைகளாக மாறி மனிதர்களின் தேவைக்கு பயன்பட்டோம். இவ்வாறெல்லாம் பல நன்மைகளை செய்த நாம், சிலரின் விருப்பு, வெறுப்புக்காக, அழிக்கப்பட்டமை மிகவும் வேதனையானயொன்று.

மனிதர்கள் எம்மை உருவாக்கவில்லை, உணவுகளையும் வழங்கவில்லை. இயற்கையாகவே உருவாகிக் கொண்டோம். அவ்வாறு பார்க்கின்ற போது, எம்மை அழிப்பதற்கு மனிதர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. ஆனால், அவர்களிடம் ஆயுதங்கள் இருக்கின்றன என்பதற்காக, எம்மை அழிப்பதற்கு துணிந்துவிட்டனர். இவ்வாறு எம்மை அழித்துவிட்டு, மனிதர்கள் அனுபவிக்கின்ற துன்பங்களை பார்க்கின்ற போது, எமக்கு வேதனையாகவே உள்ளது. மனிதர்களுக்கு எம்மீது, அனுதாபம் இல்லாவிட்டாலும், நாங்கள், மனிதர்களைப் பார்த்து ஒவ்வொரு நாளும் வேதனையடைந்து கொண்டே இருக்கின்றோம். குறிப்பாக, அதிக வெப்பத்திற்கு உள்ளாகின்றனர். மழையின்றி தவிக்கின்றனர். ஆனாலும் எம் இன இருப்பின் அவசியப்பற்றி பேசிக்கொண்டாலும், மறுகணமே அழித்துவிடுகின்றனர்.



சில தேவைகளுக்காக வயதுசென்ற எம்மினத்தவரை அழிப்பதனை ஏற்றுக்கொண்டாலும், அவர்களின் இடத்தில் ஒருவரை மனிதர்கள் உருவாக்க வேண்டும். அவ்வாறு உருவாக்கப்பட்டால், எம்மினம், அழிக்கப்படாது. அதை செய்ய மனிதர்கள் மறந்தமையே, பல இனங்கள் முற்றாகவே அழிக்கப்பட்டாகிவிட்டன.

ஆனால் சிறு குழந்தைகளையும், எவ்வித கருணைகளையும் காட்டாது, அழிக்கின்றனர். இறுதியில் எம்மினத்தின் அழிப்பு மனிதர்களின் ஒட்டுமொத்த அழிப்புக்கு காரணமாகிவிடும். இவற்றினையும், கேட்டுவிட்டு என்னை அழிக்க விரும்பினால், அழிந்துவிடு!' என்று அது கூறியது.

இவ்வாறு கண்ணனை பார்த்து சாழம்பை மரம் கூற, சாழம்பையை வெட்டுவதற்காக ஓங்கிய கத்தியை கீழே வைத்துவிட்டு, "இதற்கும் பிறகு உங்களை, நான் அழித்தேனாகின், என்னைப் போன்ற கொடும்பாவி யாருமே இந்த மண்ணில் இருக்க முடியாது. எனப் பேசிக்கொண்ட கண்ணன். உங்கள் இனத்தினை விருத்தியடைச் செய்வதற்கு ஆயிரக்கணக்கான மரங்களை நடப்போகின்றேன். உங்களின் தேவை குறித்து, எல்லோரிடமும் கூறபோகின்றேன். இறக்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும் பதிலாக இன்னொருவரை அவ்விடத்திலே உருவாக்க போகின்றேன். வீடுகள் தோறும் மரக்கன்றுகளை நடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவிருக்கின்றேன்', என்று கண்ணன் கூறிய கருத்துக்களை கேட்டுக்கொண்ட சாழம்பை தனது, தலைகளை அசைக்க, அவை காற்றாக வீச இயற்கை சுவாசத்தினை சுவாசித்துக்கொண்டு கண்ணனும் வீடு சென்றான்.

மட்டக்களப்பு, மாவட்டத்தின் படுவான்கரைப்பகுதியில் இருந்த காடுகள் பல மனிதர்களினால் அழிக்கப்பட்டமையினால், இப்பிரதேசங்களில் வெப்பத்தின் தன்மை கூடுதலாக உள்ளதோடு, இவை தொடருமானால் படுவான்கரையும் பாலைவனமாக மாறுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது. ஆடி மாதத்தின் பின்பு நீரின்றி வரண்டு போகின்ற நிலையும், படுவான்கரைப்பகுதியில் உள்ள நிலையில், காடுகள் மனித தேவைக்காக அழிக்கப்படுகின்றமை, மனிதர்களின் வாழ்வுக்கு கேடே. இவ் யாதார்த்தத்தினைப் புரிந்து கொண்டு இயற்கையை பாதுகாப்பதற்கு மனிதர்கள் அனைவரும் முயலவேண்டும்.

தொடர்ச்சி...

## அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 18

நிறுத்தப்பட்ட காரணத்தால் தங்கள் ஒரேயொரு பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் இழந்து அம்பாறை மாவட்டத் தமிழர்கள் அரசியல் அனாதைகள் ஆக்கப்பட்ட நிலையிலும் - இம்மக்கள் குறித்த அக்கறை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடத்திற்க அற்றுப்போன நிலையிலும் - அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கம் மேற்கொண்ட முயற்சிகள் அரசியல் செல்வாக்கின்மை காரணமாகப் பலனளிக்காத நிலையிலும் அப்போது முஸ்லிம் காங்கிரஸ் தலைவராகவும் அரசாங்கத்தின் அமைச்சராகவும் இருந்து எம். எச். அஸ்ரப் இந்த நிலைமையை நன்கு பயன்படுத்தினார். டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஏற்பாட்டில் அமைச்சர் அலவி மௌலானா அவர்களைச் சந்தித்து அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கம் கல்முனை விவகாரம் குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தது. முழு கல்முனைத் தேர்தல் தொகுதியையும் உள்ளடக்கியதாக 1987இல் உருவாக்கப்பெற்றிருந்த கரவாகுப்பற்றுப் (கல்முனை) பிரதேச சபையானது கல்முனைத்தமிழர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் அமைச்சர் எம்.எச்.எம். அஸ்ரப் காலத்தில் இன்னொரு முஸ்லிம் அமைச்சரான அலவி மௌலானா அவர்கள் உள்ள□ராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சராகவிருந்த அரசியல் அதிகாரத்தையும், செல்வாக்கையும் பயன்படுத்திக் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளும் நடவடிக்கையாக 1998.12.11ம் திகதியிடப்பட்ட 1057⁚.16 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 11.06.1999 இலிருந்து அமுலுக்குவருமாறு "கல்முனை நகரசபை" எனும் பெயரில் நகரசபை ஆக்கப்பட்டது. இந்த நடைமுறைகளின் போது தமிழர் விடுதலைக் கூட்டணி அஸ்ரப்பிற்கு ஆதரவாக மௌனம் சாதித்தது.

தங்களது கட்சியின் தான்தோன்றித்தனமான – தன்னிச்சையான நடவடிக்கை காரணமாக அரசியல் அனாதைகளாகிப் போன அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்குக் குறைந்தபட்சம் 1994ம் ஆண்டு கட்சிக்குக்கிடைத்த தேசியப்பட்டியல் ஆசனத்தையாவது அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கத்தின் கோரிக்கைப்படி அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவருக்கு வழங்குவதன் மூலம் " பிராயச்சித்தம்" தேட விரும்பாத தமிழர்விடுதலைக் கூட்டணி அவ் ஆசனத்தை நீலன் திருச்செல்வதிற்கு வழங்கிக் கண்துடைப்பாக அம்பாறை மாவட்ட தமிழர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக நீலன் திருச்செல்வத்தை நியமித்திருப்பதாக " சாக்கு கூறியிருந்தது. ஆனால் நீலன் திருச்செல்வமோ தனது பதவிக்காலத்தில் அம்பாறை மாவட்டத் தமிழர்களை எட்டிப்பார்த்தாரா? என்பதும் சந்தேகமே. இப்பந்தி எழுத்தாளர் அவரைப் பல தடவைகள் கொழும்பில் நேரில் சந்தித்த வேளைகளில் எல்லாம் அவரது அரசியல் செல்வாக்கை பயன்படுத்திக் கல்முனைப் பிரச்சினையைத் தீர்த்துத்தரும்படி வேண்டிக்கொண்டார். அதுமட்டுமல்ல அம்பாறைமாவட்டத் தமிழர் மகாசங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்பு அலுவலகம் சென்று தலைமைப்பிடத்துடன் இப்பிரச்சினை குறித்துப் பேசியபோது அப்பொறுப்பு கட்சியினால் நீலன் திருச்செல்வத்திடம் ஒப்படைக்கப்பெற்றது.

ஆனால் நீலன் திருச்செல்வம் எதுவுமே செய்யவில்லை. நீலன் திருச்செல்வம் அவர்கள் அமைச்சர் அஸ்ரப் அவர்களுடன் நல்ல உறவினைக் கொண்டிருந்தார். அஸ்ரப் அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலித் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் சட்ட ஆலோசனைகளை ஒப்பந்த அடிப்படையில் நீலன் திருச்செல்வத்திக்குச் சொந்தமான சட்ட நிறுவனமே வழங்கிக் கொண்டிருந்தது. மட்டுமல்ல ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களுடனும் நெருக்கமான ஊடாட்டம் அவருக்கு இருந்தது. இந்த நிலையில் ஒருநாள் அவரைச் சந்தித்தபோது 1965 ல் யூ.என்.பி - தமிழரசுக் கட்சிக் கூட்டரசாங்கத்தில் ஸ்தலஸ்தாபன (உள்ளூராட்சி) அமைச்சராக இருந்த அவரது தந்தையார் மு.திருச்செல்வம் செய்யத் தவறியதை தங்கள் காலத்தில் முடித்துத்தந்து கல்முனை தமிழர்களுக்கு உதவும்படி இப்பந்தி எழுத்தாளர் கேட்டிருந்தார். அதற்குத் தலையாட்டியது மட்டுமே அவரது செயற்பாடாகும். இதற்குக் காரணம் என்னவெனில் அவரைப் போன்ற – அவரின் தந்தையைப் போன்ற – மேட்டுக்குடி அரசியல்வாதிகளுக்கு அல்லது சிந்தினையாளர்களுக்கு உயர்மட்ட அரசியலில்தான் அதாவது " உப்பரிகை" அரசியலிதான் ஈடுபாடு அதிகமே தவிர அடிமட்ட மக்களின் அடிமட்டப் பிரச்சனைகளின் மீது அக்கறை இருப்பதில்லை. தமிழ் அரசியல் தலைவர்களின் இத்தகைய " உப்பரிகை" அரசியலை அடிமட்ட மக்கள் அதாவது விளிம்புநிலை மக்கள் இழந்து போன சமூக, பொருளாதார, அரசியல் அனுகூலங்கள் ஏராளம். ...

(தொடரும்.....)

**காணி விற்பனைக்கு உண்டு**

இருதைய புரம் 12ஆம் குறுக்கில் காணி விற்பனைக்குண்டு (10 பேச) காணியை பெற்றுக்கொள்ள விரும்புவோர் பின் காணும் தொலைபேசி இலக்கத்துடன்

தொடர்பு கொள்ளவும்.
076 945 4487

**காணி விற்பனைக்கு உண்டு**

திருப்பெருந்துறை கண்ணகி அம்மன் கோவில் பிரதான வீதியில் காணி விற்பனைக்குண்டு. 36பேச் காணியை மொத்தமாக பெற்றுக்கொள்ள விரும்புவோர் பின் காணும் தொலைபேசி இலக்கத்துடன்

தொடர்பு கொள்ளவும்.
0716165785



# மலைகளைப் பேசவிடுங்கள்

## யாருக்கும் புரியாத கணக்கு

மல்லியப்புசந்தி திலகர்

1953ஆம் ஆண்டு ஜூன் மாதம் லண்டனில் முடிசூட்டு விழாவில் இருவரும் பங்குபற்றியபோது டட்லி சேனநாயக்க இந்திய பிரதமருடன் கலந்துரையாடல்களை நடத்தினார். இரண்டு பிரதமர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலின் அடிப்படையாக பின்வரும் விடயங்கள் அமைந்திருந்தன.

அ) தற்போது இலங்கையில் வசிக்கின்ற நான்கு லட்சம் (400,000) இந்தியர்கள் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த எண்ணிக்கை உத்தரவாதமளிக்கப்பட்ட ஒரு எண்ணிக்கை அல்ல. ஆனால், உத்தேசமானதாகும். உண்மையான எண்ணிக்கை பிரஜாவுரிமைச் சட்டத்தின் பக்கச்சார்பற்ற அமுலாக்கத்தைப் பொறுத்ததாகும்.

ஆ) சட்டத்தின் கீழ் பதியப்பட்ட பிரஜைகளின் எண்ணிக்கையும் ஆறு லட்சத்து ஐம்பதினாயிரம் (650,000) ஆதல் வேண்டும். இது அதிகுறைந்த எண்ணிக்கை அல்ல; அதிகூடிய எண்ணிக்கையாகும்.



இ) நிரந்தர வதிவிட அனுமதியளிக்கப்பட்ட ஆட்களின் எதிர்கால அந்தஸ்து எதிர்கால பத்துவருட கால இறுதியில் தீர்மானிக்கப்படும். இந்தக் காலப்பகுதியில், அவர்களில் எவரேனும் இந்தியாவுக்கு மீண்டும் சென்று அந்நாட்டின் பிரஜாவுரிமையைப் பெறுவதற்கு விரும்பினால், அவர்களின் பிரேரணைக்கு இந்திய அரசாங்கம் மறுப்பு தெரிவிக்கலாகாது.


ஈ) இலங்கையில் வதியும் எஞ்சிய சுமார் மூன்று இலட்சம் (300,000), அல்லது அதற்கு அதிகமான இந்தியர்கள் இந்திய அரசாங்கத்தினால் இந்தியப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் கட்டாயமாக அந்நாட்டுக்கு அனுப்பப்படுதல் வேண்டும். இந்தச் செயற்பாடு திட்டவட்டமானதொரு காலப்பகுதியில் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படும்.

உ) இந்நடவடிக்கைகள் யாவும் இந்திய - இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக அமையவேண்டியவையாகும். ஏனையவை தொடர்பாக, ஒரே நேரத்தில் ஓர் உடன்பாட்டுக்கு வராமல் எந்தவொரு விடயத்தையும் தீர்க்க முடியாது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் தீர்க்கமானவையாய் அமையவில்லை. ஏனெனில், இலங்கைப் பிரஜாவுரிமையும் நிரந்தர வதிவிட அனுமதியும் வழங்கப்பட வேண்டியவர்களின் மொத்த எண்ணிக்கை 700,000 ஆக அதிகரிக்கப்படுதல் வேண்டும் எனவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தியர்களை இந்தியாவுக்கு கட்டாயமாக திருப்பி அனுப்புதலாகாது எனவும் இந்தியப் பிரதமர் விரும்பினார்.

இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பிரகாரம், டட்லி சேனநாயக்கவை அடுத்து அந்தப் பதவிக்கு வந்த சேர். ஜோன் கொத்தலாவல பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக 1954 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புதுடில்லிக்கு விஜயம் செய்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் பெறுபேறு 1954 ஜனவரி 18 ஆம் திகதி



பிரேரணையாகும். இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது இந்திய, பாகிஸ்தான் குடியிருப்பாளர் (பிரஜாவுரிமை) சட்டத்தின் கீழ் இலங்கைப் பிரஜை களாகத் தம்மை பதிவு செய்து கொள்ளலாம். இலங்கை அதன் பங்கிற்கு, அத்தகைய பதிவினை ஊக்குவிப்பதற்குத் தூண்டும் திட்டம் ஒன்றினை வகுப்பதற்கு உடன்பட்டது.

வரைபு முன்மொழிவுகளின் பேனா மை காயும் முன்பே, உடன்படிக்கை உரிய முறையில் அசல்படுத்த வில்லையென இரு அரசாங்கங்களினதும் குற்றச்சாட்டுகளும் எதிர்க்குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டன.

இந்திய முறைப்பாட்டில் தீவிரமாக முன்வைக்கப்படது என்னவெனில், இந்திய பாகிஸ்தான் குடியிருப்பாளர் (பிரஜாவுரிமை) சட்டத்தின் கீழ் இந்தியர்களைப் பதிவு செய்தல் துரிதப்படுத்தப்படவில்லை என்பதும் அற்ப காரணங்களினால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமை என்பதுமாகும்.

இந்திய உயர்ஸ்தானிகராலயமானது, அதன் அரசியலமைப்பின் 8 ஆம் உறுப்புரையின் கீழ் இந்தியர்களைப் பதியவில்லையென இலங்கை அதன் பங்கிற்கு முறைப்பாடு செய்தது. எழுந்த பிரச்சினைகளைச் சமாளிக்குமுகமாக அதேவருடம் ஒக்டோபர் மாதம் இன்னுமொரு தூதுக்குழுவினரை பிரதம மந்திரி டெல்லிக்கு அழைத்துச்சென்றார். அக்குழுவில் எஸ். டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவும் திரு. டட்லி சேனநாயக்கவும் இடம்பெற்றிருந்தனர். இப்பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் 1954 ஒக்டோபர் 10 ஆம் திகதி அறிக்கையில் இடம்பெற்றுள்ளன. இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளி ஆட்கள் இலங்கை பிரஜைகளாவார்கள் என்பதே இலங்கையின் நிலைப்பாடாக இருந்து வருகின்றது என்பது வலியுறுத்தப்பட்டது.

இந்த ஆட்களில் எவருமே நாடற்றவர்கள் எனும் நிலைப்பாட்டினை இலங்கைத் தூதுக்குழு ஏற்றுக்கொள் ளவில்லை. இரண்டாவதாக, இந்திய பாகிஸ்தானிய வதிவாளர் (பிரஜாவுரிமை) சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் பூரத்தியாக்கப்பட்டதும் தொழில் வாய்ப்பு போன்ற விடயங்களில் இலங்கைப் பிரஜைகளின் நலன்களை பாதுகாக்கத் தேவையானவையான நடவடிக்கைகள் குறித்த இலங்கை அரசாங்கம் பரிசிலீக்க வேண்டியிருக்கும் என்பது வலியுறுத்தப்பட்டது.

சேர். ஜோன் கொத்லாவலைக்குப் பின்னர் பிரதமராகிய காலம்சென்ற எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்க 1957 ஆம் ஆண்டு பொது நலவாய பாராளுமன்றங்களுக்கு இடையிலான மாநாட்டில் உரையாற்ற டெல்லி சென்ற போது இந்திய பிரதமருடன் உத்தியோக பூர்வமற்ற பேச்சுவார்த்தைகளை நடத்தினார். அந்த சந்தர்ப்பத்தில் அவ்விடயம் தொடர்பான இரு தரப்பினரும் கருத்துகள் பற்றி அறிந்து கொள்வதே பேச்சுவார்த் தையின் பிரதான நோக்கமாக இருந்தது. எவ்வாறாயினும் இலங்கைப் பிரசைகளைப் பதிவு செய்யும் செயன்முறை அதுவரையில் பூர்த்தியாகாமையினால், 1954 இல் எட்டப்பட்ட நிலைப்பாட்டில் எந்த முன்னேற்றமும் எட்டப்படவில்லை. இந்திய பாகிஸ்தான் குடியிருப்பாளர்கள் ( பிரசாவுரிமைச்) சட்டத்தின் கீழான பதிவு செய்தல்கள் 1962 இல் பூர்த்தி செய்யப்பட்டன.

( அறிக்கை தொடரும்)

## நாமும் செய்யலாமா?

(இது பனம்பழம் விழும் காலம்)

பகட்டான வாழ்க்கையில் பாரம்பரியத்தை மறந்து, துரிதவகை உணவுகளால் (Fast food) ஆரோக்கியத்தை தொலைக்கும் நம்மவர்க்கு இயற்கையான உணவுப் பொருட்களை கொண்டு தயாரிக்கும் உணவுகளை நாம் தமது உணவில் சேர்த்துக் கொள்ளச் செய்ய வேண்டும் என்று எமது ஆக்கத்தில் வாசகர்களை அன்புடன் வலியுறுத்தி வருகின்றேன். அதன் அடிப்படையில் நமது பண்டைய தமிழர்களின் உணவு உபசரிப்பில் பனைமரமும், அதன் மூலப்பொருட்களும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. நம் ஊரில் இயற்கையாக வளர்ந்து கிடப்பது பனைமரம். அதன் பயன்களோ ஏராளம். நுங்கு, கருப்பட்டி, வெல்லம், பனங்கற்கண்டு என்று எண்ணற்ற உணவுப் பொருட்களுக்கு மூலப்பொருளாக திகழும் பனைமரத்தின் விதைகளால் கிடைக்கும் பனங்கிழங்கும் முக்கியமான உணவுப்பொருள். இன்று எப்படி வீட்டில் பனங்கிழங்கை உற்பத்தி செய்யலாம் என்பதனை பார்ப்போம்.

இரண்டு அடி உயரமும், நான்கு அடி அகலமும், வேண்டிய அளவு நீளத்தை கொண்ட ஓர் மேடையை அமைத்துக் கொள்ளவும். அதில் நீங்கள் சேகரித்து வைத்திருந்த பனம் விதைகளை பதித்துவிடவும், அதற்கு காலையிலும், மாலையிலும் நீரினை ஊற்றி வந்தால், நாற்பதிலிருந்து நாற்பத்தைந்து நாட்களில் நீங்கள் பனங்கிழங்கு அறுவடை செய்துவிடலாம். இதில் நார்சத்து, மாசத்து இயற்கையாகவே உள்ளது. அதனால் பசியை தூண்டவும், ஜீரணசக்திக்கு உதவக்கூடியது. மலச்சிக்கல், சக்கரை வியாதிக்கு மருந்தாக இது இருந்ததால் நம் முதியவர்கள் இதில் ஒடியல் கூழ், ஒடியல் புட்டு, என வகை வகையான உணவுப்பொருட்களை செய்து சாப்பிட்டார்கள்.

ஆனால் நாமோ பீஸா (Pizza) பேர்கர் (Burger) என்று சாப்பிட்டு நோயை விலை கொடுத்து வாங்குகிறோம். காலம் கடந்துவிடவில்லை வாசகர்களே விழித்திடுவோம்......

முடிந்தவரையில் நம் பயிர்களை நாமே இயற்கையாக உற்பத்தி செய்து நோயற்ற வாழ்க்கையை வாழப் பழகுவோம்.

இயற்கையுடன் ஒன்றி வாழ்வோம்.......

----சியாமளா ஆனந்தா----

## மெல்பனில் நடந்த சிறுகதை இலக்கியம் வாசிப்பு அனுபவப்பகிர்வு




அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் வாசிப்பு அனுபவப்பகிர்வு கடந்த ஞாயிறன்று மெல்பனில் நடைபெற்றது. காலத்துக்குக்காலம் அவ்வப்போது நடந்துவரும் வாசிப்பு அனுபவப்பகிர்வில் இம்முறை மூன்று சிறுகதை நூல்கள் பேசுபொருளாகின.
இலங்கையில் கிழக்குமாகாணத்தில் வதியும் எஸ். எல். எம் ஹனீபா எழுதிய அவளும் ஒரு பாற்கடல், பிரான்ஸில் வதியும் சாத்திரியின் அவலங்கள், சுவிட்சர்லாந்தில் வதியும் பார்த்திபனின் கதை ஆகிய சிறுகதைத்தொகுதிகள் தொடர்பாக நடேசன், சுமதி அருண் குமாரசாமி, முருகபூபதி ஆகியோர் தத்தம் வாசிப்பு அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

# 'எல்லாம் தந்தீர் - நாம் எதைக் கொடுத்தோம் எம் குருவே?'

அது 1960களின் முற்பகுதி. அப்புத்தளையில் இருந்து 5ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்று, ஊவா மாகாணத்தின் பசறை என்னும் மலையக நகரில் "பசறை மத்திய கல்லூரி"யில் கற்கவந்த சிறுமி, நயிமா சித்திக்குக்கு, அவரே சொல்வது போல "தலைவிதிப்படி அமைந்த குரு", ஐயாத்துரை சாரங்கபாணி.

இதே ஆசிரியர், இலங்கையின் தென்பகுதியில், மாத்தறை மாவட்டத்தில், வெலிகம என்னும் இடத்துக்கு அருகே வெலிப்பிட்டிய என்னும் ஊரில் இருந்த வெலிப்பிட்டிய முஸ்லிம் வித்தியாலயத்தில் (இப்போது வெலிப்பிட்டிய சாஹிரா மகாவித்தியாலயம்) அறுபதுகளுக்கு சற்று முன்னதாக படித்த மற்றுமொரு முஸ்லிம் மாணவருக்கு ஒரு வீர ஜவான் போலத் தென்பட்டுள்ளார். முஸ்லிம் பள்ளிக்கூடத்தில், வெள்ளை வேட்டியும், திருநீறும் அணிந்து ஒரு ஜவான் போல கம்பீரமாக நடந்துவருவார் எனது ஆசான் சாரங்கபாணி என்கிறார் வெலிகமவைச் சேர்ந்த எம்.எல்.கலீல்.

இந்த இருவருக்கும், சில வருட இடைவெளியில் தமிழையும், சமூக கற்கைகளையும் கற்றுக்கொடுத்தவர் மட்டக்களப்பு கோட்டைமுனை மகாவித்தியாலயத்தின் முன்னாள் அதிபரான மறைந்த சாரங்கபாணி அவர்கள்.

ஒருவருக்கு ஜவானாக கம்பீரமாக தெரிந்த அதே ஆசிரியர், இன்னுமொருவருக்கு தமிழை, அதன் இலக்கணத்தை கற்றுக்கொடுத்திருக்கிறார். 'பத்தாம் வகுப்பு படித்த போதே நாங்கள் எல்லாம் இலக்கணப்படி வெண்பா எழுதுவோம் என்றால் நீங்கள் நம்பமாட்டீர்கள்' என்கிறார் நயிமா. அதற்கு காரணம் தனது ஆசிரியர் சாரங்கபாணி என்று நன்றியுடன் நினைவுகூருகிறார். நயிமா சித்திக் இன்று கலாபூஷணம் உட்பட பல விருதுகளுக்குச் சொந்தக்காரி. நாவல்கள், சிறுகதைத் தொகுப்பு என பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்ட சாரங்கபாணி அவர்கள், தனது ஆசிரியப் பணியை முதலில் ஆரம்பித்தது வெலிப்பிட்டிய, அதன் பின்னர் பசறை. இறுதியில் ஓய்வுபெற்றது மட்டக்களப்பு கோட்டைமுனை மகாவித்தியாலயத்தின் (இன்றைய இந்துக் கல்லூரி) அதிபராக.

இன்று, என்னிடம்படித்த ஒரு பெண், "உயர் கல்வி கற்பதற்கு மணித்தியாலத்துக்கு ஆயிரம் ரூபா செலவழிக்க வேண்டியிருக்கிறதே" என்று என்னிடம் வந்து கவலைப்பட்ட போது எனக்கு எல்லாவற்றையும் , தானே செலவழித்துச் சொல்லிக்கொடுத்த எனது ஆசாந்தான் ஞாபகத்துக்கு வந்தார் என்கிறார் நயிமா.

'எங்களை எல்லா போட்டிகளுக்கும் தானே தயார்படுத்தி அனுப்புவார், தானே போட்டிகள் நடாத்தியும், தனது பணத்தில் புத்தகங்களை வாங்கியும் எங்களுக்கு பரிசாகக் கொடுப்பார். இன்று காசுக்கு கல்வியை விற்பவர்களை க்காணும்போது, எமது ஆசானை நினைத்து எனது உள்ளம் உருகும்' என்கிறார் நயிமா சித்திக்.

## 'முஸ்லிம் பாடசாலையில் திருநீறு, வேட்டியில் வீர ஜவான் போல வந்தவர்'

தனது கல்வியை முடித்துக்கொண்ட பின்னர் சில காலம் மலையக பிள்ளைகளுக்காக அப்புத்தளையில், தனது சொந்தக் காணியில், "அசோகா வித்தியாலயம்" என்ற பெயரில் பள்ளிக்கூடம் ஒன்றையும் நடத்தியுள்ளார் நயிமா சித்திக். மலையக தொழிற்சங்க வரலாற்றில் இவரும் ஒரு சிறு பங்களிப்பைச் செய்துள்ளார். ஏ. அஸீஸ் அவர்களின் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸில் 1963 – 65 வரை பெண்கள் பிரிவுக்கான அகில இலங்கை தலைவியாகவும் நயிமா பணியாற்றியுள்ளார். தனது ஒவ்வொரு படி நடவடிக்கையிலும் தனது ஆசான் சாரங்கபாணியின் பாதிப்பு இருக்கிறது என்கிறார் அவர். அவரது சேவைமனப்பாங்கும் அதில் அடக்கம் என்கிறார்.

'வெலிப்பிட்டியவுக்கு ஒருதடவை வந்துபாருங்கள் சுமார் 60 வருடம் கடந்த பின்னர், இன்றும்கூட சாரங்கபாணி என்றால் பலருக்கும் தெரியும்' என்கிறார் கலீல். 'அவரது கம்பீரமான தோற்றமும், செயற்பாடும், அவர் கற்றுக்கொடுத்த விதமும் எங்கள் ஊரில் பலரை உருவாக்கிவிட்டிருக்கிறது. படியாதவர்களாக இருந்த எங்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்பட்டதே சாரங்கபாணி சேர் போன்றவர்களால்தான். அதனால், இன்றும் எங்கள் ஊரில் அவரை பலரும் ஞாபகம் வைத்திருக்கிறார்கள்' என்றார் அவர்.

பசறை மத்திய கல்லூரியில், தமிழர்களுக்கான பாடசாலை, "மாலை நேரப் பாடசாலை"யாக இருந்த காலத்தில், சாரங்கபாணி ஆசிரியர் அவர்கள் நடாத்திய முத்தமிழ் விழா இன்றும் மறக்கமுடியாத ஒரு நிகழ்வு நயிமாவுக்கு. மிகுந்த துணிச்சலுடன் வலுவாக உழைத்து, அவர் அதனை நடத்திக்காட்டியதாகவும், அப்படியான நிகழ்வுகள்தான் அங்கு இன்று தமிழும் தமிழரும் வளர்ந்து உயர்ந்திருப்பதற்கு



காரணம் என்கிறார் அவர்.

தன்னிடம் இருந்ததை எல்லாம் எங்களுக்கு தந்து, கற்பித்த நமது ஆசிரியர் சாரங்கபாணிக்கு நாம் என்ன கொடுத்தோம், அவருக்கு நாங்கள் பதிலுக்கு எதுவும் கொடுக்க முடியவில்லையே என்பது நயிமா சித்திக்கின் கவலை.

'பல தலைமுறைகள் இன்று கடந்துவிட்டன, எத்தனையோ ஆசிரியர்கள் வந்து அதேபள்ளிக்கூடத்தில் கற்பித்துச் சென்றிருக்கிறார்கள். ஆனால், சாரங்கபாணி என்ற பெயரை ஊர் மறக்கவில்லை.' என்கிறார் கலீல்.

ஒரு தமிழ் ஆசிரியர் குறித்து இரு மாணவர்களுக்கு மனதில் இருவகையான விம்பங்கள் பதிந்துள்ளன. ஒரு பொருளில் இருந்து வந்தாலும் சுமார் 50 வருடங்கள் கடந்ததால், ஏற்பட்ட ஊடகமாற்றத்தின் காரணமான இது "ஒரு ஒளிமுறிவுதான்". ஆனால், குவிவில்லையின் ஊடாக அழுத்தமாகக் குவிக்கப்பட்ட விஸ்வரூப விம்பங்கள் இவை.


---

# திருக்குறள் இன்பம் - 8

*(உலகப் பொதுமறையாக விளங்குகின்ற ஒப்பற்ற அறிவு நூலும், தனித்துவம்மிக்க காதல் இலக்கியமுமான திருக்குறள் இலக்கணமிட்டுள்ள காமத்துப்பாலின் இனிய காட்சிகளின் இன்பத்தைப் பகிர்ந்துகொள்ளும் கட்டுரைத்தொடர்.)*

சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா

கடந்த வாரம், பிரிந்திருக்கும் காதலர்கள் தாம் ஒன்றாகச் சேர்ந்திருந்த காலத்தில் இருவரும் சேர்ந்து அனுபவித்த இன்பத்தையும், மகிழ்ச்சியையும் காதலன் எண்ணிப்பார்த்து, அந்த நினைவுகளைப்பற்றி வெளிப்படுத்தும் காட்சிகள் இடம்பெற்றன. இப்போது, தன் நினைவுகளை ஒரு காதலி மனதில் மீட்டுப் பார்க்கும் காட்சிகளைப் பார்ப்போம்.



காதலில் வீழ்ந்துவிட்ட ஆண்கள், பித்துப் பிடித்தவர்களைப்போலப் பிதற்றுவார்கள், பெற்றோருடன் முன்னுக்குப் பின்னர் முரணாகக் கதைப்பார்கள், நண்பர்களுடன் அவசியமில்லாமல் அளப்பார்கள், தனிமையில் நின்று சிரிப்பார்கள், காதலியின் தம்பி தங்கையருக்குக் கனிவோடு தமது தாராள குணத்தை அள்ளித் தெளிப்பார்கள், என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

அதே போலத்தான் காதலிக்கும் பெண்களின் அன்றாட நடவடிக்கைகளிலும் வித்தியாசம் தெரியும். அவர்களது நடை, உடை, பாவனைகளில் பெருத்த மாற்றம் வெளிப்படும். வீட்டு வேலைகளில் அலட்சியம் தோன்றும். காதலனின் கண்களில் படக்கூடியதாக தோழிகளுடன் வெளியே செல்வதில் மகிழ்ச்சி ஏற்படும். எல்லாவற்றுக்கும் மேலாகத் தனிமையில் கண்களை மூடியிருந்து நெஞ்சில் இருக்கும் காதலனை நினைத்துக்கொண்டிருப்பது எல்லையில்லா இன்பமாக இருக்கும். வண்ணப்படமாக அவளின் கண்களின் அவன் நர்த்தனம் ஆடுவான். சின்னக் கதைகள் சொல்லி அவளைச் சீண்டுவான். அவள் சிரிப்பாள். சத்தமில்லாமல் முணுமுணுப்பாள். என்னேரமும் தன் கண்களில் நிறைந்திருக்கும் காதலனின் முகம் மறைந்துவிடக்கூடாதே என்ற கவலை, அவளின் நெஞ்சில் நளினமாகப் படர்ந்திருக்கும்.

இத்தகைய நிலைமையக் கூறும் திருக்குறள்களை இப்போது படித்துச் சுவைப்போம்.

இமைகளை மூடினும், என்னவர் ஊடிடார்!

---

அவள் மலர்ந்தும் மலராத, கனிந்தும் கனியாத கன்னிப் பருவப் பேரெழில் பெண்ணொருத்தி. அவள் ஒருவனைக் காதலிக்கிறாள். எப்போதும் அவன் தனது உயிரிலே கரைந்து, உள்ளத்திலே பரந்து வாழ்வதாக அவள் உணர்கிறாள். தனது கண்களை விட்டு ஒரு கண நேரமும் விலகாமல் கண்களில் கலந்து இருக்கின்றான் என்று அவள் நம்புகின்றாள். ஏனென்றால், கண்களை மூடினாலும் சரி, திறந்தாலும் சரி அவனது முகம்தானே அவளுக்குத் தெரிகிறது! அப்படியென்றால், மிகவும் நுட்பமான விதத்தில், தன் அகத்தில் அவன் வீற்றிருக்கிறான். அதனால், "நான் கண்களை இமைத்தாலும் அவன் வருத்தம் அடைய மாட்டான். நான் எப்படியிருந்தாலும், என்ன செய்தாலும் அவன் என்னை விட்டு விலக மாட்டான். என்மேல் அவ்வளவு அவனுக்கு. என்று சொல்லி அடிக்கடி கண்களை இமைத்து, காதலன் இன்னும் தன்னோடு இருக்கிறான்" என்பதை உணர்வதிலே இன்பம் காண்கிறாள்.

கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர் எம்காத லவர் (1126)

எனது உள்ளத்தில் எப்போதும் வாழ்கின்ற காதலர், எனது கண்களைவிட்டு ஒருபோதும் நீங்கவே மாட்டார். அவ்வளவு நுட்பமான வடிவத்திலே அவர் இருக்கிறார். அதனால் நான் எனது கண்களை இமைத்தாலும் அவர் வருந்தவே மாட்டார், என்பது குறள் தரும் பொருள்.

கண்ணுக்கு மையிட்டால், என்னவன் மறைவானே!

---

ஆளுக்கு ஆள் நினைவுகளும் மாறுபடும், நிலமைகளும் வேறுபடும். இன்னொருத்தியின் நிலமை இங்கே சற்று வேறுபடுகிறது. அதனால் நினைவும் மாறுபடுகின்றது.

கண்களுக்கு மைதீட்டிக் கொள்வதும், புருவங்களை நீவிவிட்டு அழகு செய்வதும் பண்டைக்காலத்திலிருந்தே, தமிழ்ப் பெண்களின் வழக்கமாக இருந்து வருகின்றது. சங்க இலக்கியங்களிலே பெண்கள் கண்களுக்கு மைதீட்டி அழகு செய்வது பற்றிய தகவல்கள் உள்ளன. கோவலன் பிரிந்து சென்று மாதவியுடன் வாழ்ந்த காலத்தில், கண்ணகி தன் கண்களுக்கு மை தீட்டுவதை மறந்திருந்தாள் என்று சிலப்பதிகாரத்திலே சொல்லப்பட்டுள்ளது. இந்தக் குறளில் குறிப்பிடப்படும் பெண்ணும் தன் நினைவு தெரிந்த காலத்தில் இருந்து கண்களுக்கு மைதீட்டி அழகு செய்து வந்தவள்தான். ஆனால், காதலன் ஒருவனுக்குத் தன் உள்ளத்தைக் கொடுத்த நாளில் இருந்து கண்களுக்கு மை தீட்டுவதை நிறுத்திக்கொண்டாள். ஏனென்றால், தன் காதலன் தனது கண்களின்

தொடர்ச்சி... (பக்கம் -15 )



# மட்டக்களப்பின் மலபார்கள்

## வான்கூன்ஸின் அறிக்கையிலிருந்து

மைங்கணான் மகிழறிவன்

வான்கூன்ஸ் மட்டக்களப்பு மலபார்கள் அதாவது தமிழர்கள் பற்றி சொல்வதை இந்த வாரம் பார்க்கலாம். பழக்கவழக்கம், சமயம், தோற்றம், ஏனைய இயல்புகள், அனைத்திலும் மட்டக்களப்பின் மக்கள், யாழ்ப்பாணப்பட்டினம் – கொட்டியாரம் – மங்குல் கோரளையின் வடபகுதி உள்ளிட்ட, இங்கிருந்து மேற்கே கல்பிட்டி வரையான பகுதி உள்ளடங்கலாக வாழும் மலபார் மக்களை ஒத்தவர்கள். இப்போதும் மலபார் மொழி பேசும் இவர்கள், மிகப்பழங்காலத்திலிருந்தே இங்கு வாழ்ந்து வருவதுடன், தங்களுக்குரிய உட்பிரிவுகளாகப் பிரிந்துள்ளதுடன், சிங்களவர்களுடனோ வேடர்களுடனோ தங்கள் உட்பிரிவு தவிர்ந்த ஏனையோருடனோ கலந்து வாழ்வதில்லை. ஏனையவர்களும் இவர்களுடன் கலக்க விரும்புவதில்லை. யாழ்ப்பாணப்பட்டினம், கொட்டியாரம் முதலான ஏனைய பகுதி மக்கள் போலவே மட்டக்களப்பு மலபார்களும் சிங்களவர்களிலிருந்து தனிப்பட்டவர்களாக, ஓரளவு சுதந்திரமானவர்களாகவும் இருக்கிறார்கள். கண்டி மன்னனின் கொடுங்கோன்மையிலிருந்து தங்களைக் காத்துக்கொள்வதற்காக மட்டுமே இவர்கள் நமது கம்பனியுடன் இணைந்திருக்கிறார்கள்.

இந்த அழகான, செழுமையான பூமியானது, தென்னை, மா, பலா முதலான மரங்கள் நிறைந்தது. நன்செய் நிலங்கள், சதுப்பு நிலங்கள், காடுகள் எல்லாமே வெவ்வேறு நதிகளால் செழிக்கின்றன. இந்த நதிகள் உள்நாட்டில் சுமார் 12 ஜேர்மன் மைல் பரப்பில் அமைந்துள்ள பாரிய ஏரியொன்றில் கலக்கின்றன. பெருமளவு உவர்மீன்களைக் கொண்ட ஏரியில், நாம் நன்கு திட்டமிட்டால் பெருமளவு மீன்களைப் பெறமுடியும்.

மட்டக்களப்பு என்றும் அறியப்படும் "பெற்றிகலோ", பல சிறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை பண்டாரங்கள் அல்லது திசாவை என்று அறியப்படும் மூன்று ஆளுநர்களின் கீழ் பிரிக்கப்பட்டிருந்தன. வசதிக்காக நாங்கள் இவற்றை ஒருபிரிவாக ஆண்டாலும், இன்றும் அந்த மூன்று பிரிவுகளும் நிலவுகின்றன. கல்லாறு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று என்பன அவை. இவற்றில் கல்லாறு திசாவைப் பிரிவு மிகப்பெரியது. மண்முனை, போரைதீவு, எருவில் மற்றும் ஏறாவூர் எனும் நான்கு மாகாணங்களைக் கொண்டிருக்கிறது. மண்முனையில் 11, எருவில்லில் 7, போரைதீவில் 4, ஏறாவூரில் 5 என்ற எண்ணிக்கையில் சனத்தொகை கூடிய கிராமங்களும், நெல்வயல்களுக்கிடையே அமைந்த வேறு சிறுசிறு குக்கிராமங்களும் காணப்படுகின்றன.

இவற்றில் மண்முனைக் கிராமமும், இப்போதும் பிரதானமான கிராமமாக இருக்கும் சம்பாந்துறைக் கிராமமும் குறிப்பிடத்தக்கவை. இங்கிருந்து ஒன்றரை மணித்தியால தூரத்தில் அது அமைந்திருக்கிறது. நல்ல ஆறொன்றுக்கு அருகில் அது அமைந்திருக்கிறது. 'ட்சஞ்பான்'கள் கடலிலிருந்து அந்த ஆற்றுக்கு வருகின்றன. "துறை" என்ற மலபார்ச்சொல்லுக்கு, துறைமுகம் என்று பொருள். எனவே தான் இதற்கு சம்பாந்துறை என்று பெயர் வந்திருக்கிறது. கொட்டியார மாவட்டத்திலும் அதே பெயரில் ஒரு துறைமுகம் இருக்கிறது.

வடக்கெல்லையிலுள்ள ஏறாவூர் மாகாணம், வடக்கே தம்பன்கரவத்தையும், வன்லூஸ் குடாவினருகே நட்டூர் ஆற்றின் அருகே எல்லையைக் கொண்டிருக்கிறது. மேற்குப்பக்கம் அதன் கரையானது சித்தாண்டிக்குடியிருப்பை நெருங்கிச் செல்கிறது. அதன் வடக்கே கொக்குவில்பளை இருக்கிறது. எனவே தம்பன்கரவத்தையானது, கொட்டியாரத்துக்கும் ஏறாவூருக்கும் இடையே அமைந்துள்ளது. கொக்குவில் பொலைக்கும் மாவிலிகங்கைக்கும் இடையில் இரண்டு ஜேர்மன் மைல் தூரமே உள்ளது. அந்த இரண்டு மைல் தூரமும் சதுப்பு நிலமும் புல்வெளியும் தான். எனவே அக்கரைப்பற்றுக்குத் தெற்கே உள்ள ஒருவர், மிகக்குறைந்த கஷ்டங்களை உபயோகித்து, தன்னிடமுள்ள மரத்தளபாடங்களை தனது பட்டறையிலேயே ஏற்றி, வடக்கே கொட்டியாரம் வரை வந்து விற்க முடியும்.

இந்த ஏறாவூர் மாவட்டத்திலேயே வெல்லசை வரை, மேற்கே ஏழுகோரளை வரை பரந்திருக்கும் கறுவாக்காடு இருக்கிறது. இந்தக்காட்டில் நல்ல தளபாட மரங்களும் கிடைப்பதால், இதன் வளம் முக்கியத்துவம் கருதி, இலங்கையின் மிகச்சிறந்த இடங்களில் ஒன்றாக இதைச் சொல்லலாம். இங்கிருந்து தெற்குப்புறமாக மண்முனை, போரைதீவு, எருவில் ஆகிய கல்லாற்றின் மாகாணங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அமைந்து விளங்குகின்றன. நன்செய் நிலங்களும் வளமான பூமியும் நிறைந்த மண்முனைப் பகுதியில் தான் புலியனின் தீவு அமைந்துள்ளது.

இரண்டாவது திசாவைப்பிரிவில் சம்மாந்துறை, கரைவாகு ஆகிய மாகாணங்கள் அடங்கும். கரைவாகு கடலோரமானது. சம்மாந்துறை சற்று உட்புறமானது. இரண்டுமே அருமையான நன்செய் நிலங்கள் கொண்டவை. இவை இரண்டையும் அடுத்து செங்கப்படை ஆற்றின் அக்கரையில் அக்கரைப்பற்று எனும் இறுதி மாகாணம் ஆரம்பிக்கின்றது. அதன் தென்னெல்லையில் சங்கமன்கண்டியில் பாணமை ஆரம்பிக்கின்றது. பாணமையை சிங்களவர்கள் பனோவா என்று அழைக்கிறார்கள். அக்கரைப்பற்றும் சம்மாந்துறைக்கு குறையாத அளவு பெரிய வளமான மாகாணம். வெல்லசை, வேடர்களின் நாடு வரை இதன் மேற்கெல்லை நீள்கின்றது. நல்ல காடுகளும் நன்செய் நிலங்களும் மக்கள் எண்ணிக்கையும் அதிகமானது. யாரும் இதை வியப்பில்லாமல் காணமுடியாது. எனவே மட்டக்களப்பின் இறுதி திசாவைப்பிரிவான அக்கரைப்பற்றை முதன்மையானதாக சொல்லப்படலாம்.

பாணமைப்பிரிவு செழிப்பிலும் மக்கள் எண்ணிக்கையிலும், மட்டக்களப்பின் பிரிவுகளை விட குறைவானது. எனினும் சங்கமன்கண்டியிலிருந்து அறுகாமம் வரையான பகுதி வளமானது. மக்கள் எண்ணிக்கை கூடியது. அறுகாமத்துக்குத் தெற்கே பெரும்பாலும் விவசாய பூமியாகவும், குறைவான குடியேற்றங்களைக் கொண்டதாகவுமே காணப்படுகின்றது. அதற்குத் தெற்கே அரைமைல் தொலைவில் அப்புறத்தோட்டை துறைமுகம் அமைந்துள்ளது. இந்தப் பாணமைப்பிரிவும் தமக்கென ஒரு திசாவையைக் கொண்டிருக்கின்றது. திசாவையை தங்கள் பிரிவைச் சேர்ந்த சிங்களவரிலிருந்து தெரிவுசெய்யவில்லை என்றால் இவர்கள் கலகம் செய்வதுடன், அருகிலிருக்கும் அக்கரைப்பற்றுக்கும் தப்பியோடி விடுவார்கள்.

இப்படி பழைய மட்டக்களப்புத் தேசத்தின் திசாவைப்பிரிவுகள் பற்றியும், அவற்றின் புவியியல் அம்சங்கள் பற்றியும் விரிவான விளக்கத்தைத் தந்திருக்கிறார் வான்கூன்ஸ். இந்த விளக்கத்தில் அறுகாமம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிற இடம், இன்றைய பொத்துவில் என்று ஊகிக்கப்படுகிறது. அப்புறத்தோட்டை துறைமுகமே இன்றைய உல்லை அல்லது அறுகம் குடா ஆகலாம். தம்பன்கரவத்தை என்று சொல்லப்பட்டிருப்பது தம்பன்கடுவை பகுதி. இன்றைய பொலனறுவை மாவட்டத்தில் அமைந்திருந்த பழைய நிர்வாகப்பகுதி. அதேபோல் மங்குல்கோரளை என்பது, இன்றைய அனுராதபுர மாவட்டத்தின் தென்பகுதி. இங்கிருந்து மேற்கே கல்பிட்டி வரை மலபார்களே இருந்தார்கள் என்ற வான்கூன்சின் குறிப்பின் பின்னே தான் வரலாறு மறைந்திருக்கின்றது.

---

தொடர்ச்சி...

# பிரதேச இலக்கியப் படைப்புலகில் மக்களையும் இயற்கையையும் ஆழ்ந்து நேசிக்கும் எஸ்.எல்.எம் ஹனிபா

கதைகளாக வடிக்கத் தயங்கினேன். நான் அனுபவித்தவற்றையே எழுதுகிறேன். என் அனுபவம் சத்தியம் என்றால், என் எழுத்தும் சத்தியக் கோலம் புனையும்."

இந்த வரிகளிலிருந்து கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களின் பேச்சுவழக்கை நாம் அறிய முடிகிறது. அம்மக்களின் ஆத்மாவும் மண்ணின் வாசமும் ஹனிபாவின் கதைகளில் பேசும்.கிழக்கிலங்கை வாழ் தமிழ் - முஸ்லிம் மக்களின் பேச்சுவழக்கை இலக்கியத்திற்கு வரவாக்கியவர்களில் எஸ்.எல். எம். ஹனிபா முன்னோடியாவார். யதார்த்த இலக்கியம் படைத்திருக்கும் இவர் தனிப்பட்ட மற்றும் இலக்கிய - அரசியல் பொதுவாழ்விலும் யதார்த்தவாதியே!.
யதார்த்தவாதிகளினால் - யதார்த்த வாதிகளுக்கும் பிரச்சினை - மற்றவர்களுக்கும் பிரச்சினைவரும். ஹனிபாவும் இலக்கிய உலகிலும் அரசியல் பொது வாழ்விலும் பிரச்சினைகளை சந்தித்தவர்.

பிரச்சினைகளைக்கண்டு ஓடவோ ஒதுங்கவோ மாட்டார். அவர் தொடர்பாக வெளிவந்துள்ள எதிர்வினைகளையும் வாசித்திருக்கின்றேன். எனினும் அவருடைய தொடர்பாடல் பிரதேசம், தேசம், சர்வதேசம் கடந்தது.

இலங்கையிலும் இந்தியாவிலும் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் ஏராளமான இலக்கிய நண்பர்களை சம்பாதித்தவர். எழுத்தாளர்கள் எஸ். பொன்னுத்துரை, பேராசிரியர் கா. சிவத்தம்பி, ஜெயமோகன், நடேசன், எம். கே. முருகானந்தன் உட்பட பலர் ஹனிபா பற்றிய குறிப்புகளை எழுதியிருக்கிறார்கள்.

தனக்கு கல்வி புகட்டிய ஆசான்களை மதிக்கத்தெரிந்தமையால் அவர்கள் பற்றியும் தனது மக்கத்துச்சால்வை தொகுப்பில் மறக்காமல் இவ்வாறு பதிவுசெய்துள்ளார்:

"எனக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியப் பெருந்தகைகள் சாம்பல்தீவு செல்லத்துரை, பங்குடாவெளி விநாயமூர்த்தி மருதமுனை ஹபீப் முஹம்மது, கல்முனைக்குடி ஆதம்பாவா, ஓட்டமாவடி அப்துல்காதர்,
இவர்களோடு சேர்ந்து என் தாழ்விலும் வாழ்விலும் இருவர் பங்கேற்றார்கள். ஒருவர் ஆங்கில ஆசிரியர் கொழும்பு பரீத் அவர்கள்- மற்றவர் பறகஹதெனிய ஆங்கில கல்வி அதிகாரி எம்.பாளிஹு அவர்களாகும்.

இந்தத் தொகுதியை வெளிக்கொண்டுவரும் முயற்சியில் நான் இறங்கியபோது எனக்கருகிலிருந்து கதைகளைப் படித்து ஆலோசனைகள் வழங்கிய தமிழாசிரியர் கவிஞர் வீ.ஏ.ஜுனைத். கடந்த காலத்தை நனவிடைதோய்ந்திருக்கும் ஹனிபா, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையடுத்து அமைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையிலும் அங்கம் வகித்தவர். அதன் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தனது சகாக்களுடன் இந்தியாவுக்கு கப்பலேறியபோது ஹனிபா, ஊரைவிட்டுச்செல்லவில்லை என்பது அதிசயம்தான்!

இயற்கையை நேசிக்கும் இயல்பும் கொண்டிருக்கும் ஹனிபா, தான் வாழ்ந்த பிரதேசத்து மக்களையும் ஆழமாக நேசிப்பவர். அதனால் அவருடைய படைப்புகளில்" இயற்கையும் மக்களும் இணைந்திருக்கிறார்கள்.

( தொடரும்)

---

தொடர்ச்சி...

# அமைச்சர் தயாகமகேயினால் தீர்ந்தது திருக்கோவில் ஆதார வைத்தியசாலைப் பிரச்சினை!

அங்கு திருக்கோவில் ஆதாரவைத்தியசாலையில் அடிக்கல் நடப்பட்டதே தவிர அங்கு எவ்விதமான உட்கட்டுமான அபிவிருத்தியும் நடைபெறவில்லையெனவும் கல்முனை பிராந்திய சுகாதாரப்பணிமனையால்



அதனைச்செய்யமுடியாவிடில் அம்பாறையுடன் இணைக்குமாறு கோடீஸ்வரன் எம்.பி. சபையில் பிரச்சினையை முன்வைத்தார்.

அதைத்தொடர்ந்து வாதப்பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டன. பலரும் பலவிதமாகப் பதிலளித்தனர். நிதி கிடைக்கவில்லை. நாம் பொறுப்பல்ல மத்திய அமைச்சே பொறுப்பு எனக்கூறி தப்பித்தனர்.

இவ்வாறு அரைமணிநேரம் இப்பிரச்சினை இழுபட்டதைக்கண்டு அமைச்சர் தயாகமகே தலையிட்டு அந்த உட்கட்டுமானப்பணிகளுக்கு எவ்வளவு தேவை ? எனக்கேட்டார். அதற்கு 30மில்லியன் ருபா என பிரதேசசெயலாளர் சிவ.ஜெகராஜன் பதிலளித்தார்.

சரி.அதனை நான் தருகிறேன். எதிர்சரும் டிசம்பர் மாதத்திற்குள் அந்த வேலைகளைச் செய்துமுடியுங்கள். என்று கூறி பிரச்சினைக்கு முற்றுப்புள்ளிவைத்தார்.




## திருமண வாழ்த்து



இலங்கை இந்தியத் தொடர்பாளர் மணவை அசோகனின் புதல்வி சரண்யா மற்றும் ஃபிறறிக் சகாயம் ஆகியோரின் திருமணம் அண்மையில் கொழும்பு திம்பிரிகசாய தேவாலயத்தில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.

மணமக்கள் சகல நலன்களும் பெற்று இனிதாக வாழ அவர்களை குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் வாழ்த்துகிறார்கள்.

## இன்று வளத்தாப்பிட்டி பத்ரகாளியம்பாள் ஆலய தீமிதிப்புவைபவம்!



அம்பாறை வளத்தாப்பிட்டி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலய வருடாந்த தீமிதிப்பு வைபவம் (13)வியாழக்கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது. அங்கு விசேடபூஜையின் பின்னர் பக்தர்கள் தீமிதிப்பிலீடுபடுவதையும் பார்வையாளர்களையும் காணலாம்.



(படங்கள் :காரைதீவு நிருபர் சகா)

## அம்பாறை ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய தீர்த்தம்!



அம்பாறை ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவ வைபவம் நேற்று(13)வியாழக்கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது. அங்கு ஆலயத்தலைவரும் வீதிஅபிவிருத்தித்திணைக்களத்தின் கிழக்கு மாகாணப்பணிப்பாளருமான எந்திரி வ.கருணைநாதன சுன்னமிடிப்பதையும் விசேடபூஜை இடம்பெறுவதையும் பக்தர்கள் கண்டுகளிப்பதையும் காணலாம்.

(படங்கள் :காரைதீவு நிருபர் சகா)



## உங்கள் வீட்டுக்கு வாரத்தில் எத்தனை தடவை குப்பை வண்டி வரும்

மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் உங்கள் வீடுகளுக்கு வாரத்துக்கு எத்தனை தடவை குப்பை அல்லது கழிவு அகற்றும் வண்டிகள் வரும்?

கொக்குவில், வலையிறவு போன்ற இடங்களுக்கு வாரத்துக்கு ஒருதடவை வரலாம். வேறு சில இடங்களுக்கு வாரத்துக்கு இரு தடவை குப்பை அகற்றும் டிராக்டர்கள் வரும். புளியந்தீவு, கோட்டைமுனை மற்றும் வெட்டுக்காடு போன்ற இடங்களுக்கு வாரத்துக்கு மூன்று தடவைகள் வரும். இது பெரும்பாலும் அனைவருக்கும் தெரிந்த ஒரு விடயம். ஆனால், இங்கு ஒரு ஒப்பீடு தேவைப்படுகின்றது.

உலகின் மிகவும் முன்னணி நகரங்களில் ஒன்றான லண்டன் போன்ற சில இடங்களில் வாரத்துக்கு ஒரு தடவைதான் குப்பை அகற்றும் வண்டிகள் வரும். அந்த வகையில் பார்த்தால் மட்டக்களப்பு மாநகரசபையின் இந்த மூன்று சனநெரிசல் மிக்க பகுதிகளில் உலகின் முன்ன்ணி நகரங்களின் அளவை விட குப்பை அகற்று வண்டிகள் அதிகமாக வந்து போகின்றன.

ஆனாலும், இங்கு சில இடங்களில் இன்னமும் மக்கள் தெருக்களில் குப்பையை போடும் நடவடிக்கை தொடரத்தான் செய்கிறது.

சத்துருக்கொண்டான், நகரின் அட்வகேட் தெரு, புதிய பாலத்தின் இரு புறம் ஆகிய இடங்களில் குப்பைகளை சிலர் வீடுகளில் இருந்துகொண்டுவந்து கொட்டிவிட்டுச் செல்வதாக கவலைப்படுகிறார் மாநகர துணை ஆணையாளரான என். தனஞ்சயன். அதிலும் படித்த வாகனம் வைத்திருக்கும் ஆட்களே இந்த வேலையைச் செய்வதாக அவர் கூறுகிறார்.

அதேவேளை, மாநகர எல்லைக்கு வெளியே உள்ள சில பகுதிகளை சேர்ந்தவர்கள் இங்கு இறைச்சிக்கழிவுகளை கொண்டுவந்து கொட்டிவிட்டுச் செல்வதாகவும் அவர் கூறுகிறார்.

மட்டக்களப்பு மாநகர சபை 75.06 சதுர கிலோ மீற்றர் பரப்பில், உள்ள 128 கிராமங்களில், 48 கிராம சேவகர் பிரிவுகளில் குப்பைகளை அகற்றுகின்றது. அதன் 20 வட்டாரங்களில் இவை அடக்கம்.

அண்மைக்காலமாக மாநகர சபையின் குப்பை டிராக்டர்கள் குறித்து மக்கள் மத்தியில் இருந்து பெரிதாக முறைப்பாடுகள் வருவதில்லையாம். குப்பை அள்ளும் வாகனங்களில் ஜிபிஎஸ் பொருத்தப்பட்டிருப்பதும் அதற்கு ஒரு காரணம்.

ஆனால், பொதுமக்களைப் பொறுத்தவரை நகரின் பொது இடங்களில் குப்பைத் தொட்டிகள் வைக்கப்படவில்லை என்ற குறை இருப்பது தமக்கு தெரியும் என்கிறார் தனஞ்சயன்.

ஆனால், இதில் சில பிரச்சினைகள் இருப்பதாக அவர் கூறுகிறார். ஏனைய பெரிய நகரங்களைப் போல பொதுமக்கள் குப்பைகளை, கழிவுகளை பகுத்து தொட்டிகளில் போடுவது இங்கு மிகவும் குறைவு. ஆகவே அந்தக் குப்பைத்தொட்டிகளை அகற்றுவதில் பெரும் சிரமத்தை மாநகர சபை எதிர்கொள்கிறது. அதனைவிட கருச்சிதைவுக் கழிவுகளைக் கூட குப்பைத்தொட்டிகளில்



போட்டிருக்கிறார்களாம். இதனால், பொது இடங்களில் குப்பைத் தொட்டிகளை வைக்க மாநகர சபை தயங்குகிறது.

குப்பைகளை வீடு வீடாகச் சென்று அகற்றுவதில் கூட 2016 நவம்பரில் வந்த ஒரு அரசாங்க உத்தரவின்படி, 20 பேச்சர்ஸுக்கு அதிகமான பரப்பை கொண்ட காணிகளில் மாநகர சபை குப்பைகளை அகற்ற வேண்டிய அவசியம் கிடையாது. அவர்களே தமக்கான குப்பை அகற்றும் பொறிமுறையை கொண்டிருக்க வேண்டும். ஆனால், இதனை பார்க்காமல் மாநகரசபை இங்கு அதனையும் செய்கிறது.

உண்மையில் பொதுமக்கள் தமக்கு நல்ல அனுசரணையை வழங்கினால் மட்டக்களப்பு தூய்மையாகத் திழக நீண்ட காலம் பிடிக்காது என்று துணை ஆணையாளர் நிச்சயமாகக் கூறுகிறார்.

# மட்டு மாநகரசபை

## மதன் என்ற மாநகரன்...



மாநகரசபையின் எட்டாம் வட்டார உறுப்பினர் பெயர் மதன். தந்தைபெயர் துரைசிங்கம். பெயருக்கேத்த வாட்டசாட்டமான அழகான 33 வயது இளைஞர். இலங்கை அணிக்காக ஆசிய மட்டத்தில் கபடிப் போட்டிகளில் ஆடிய வீரர். தனது பயிற்சியாளர் பற்றி பேசும்போது கண்ணிர் விட்டு உணர்ச்சிவசப்படுகின்றார்.

உள்ளூராட்சி சபை என்பது அரசியல் பாடத்தை அரசியல்வாதிகள் கற்கும் கூடம். அரசியலின் ஆரம்பப்பள்ளி அது. இவரைப் போன்று சமூகத்தின் அடிமட்டத்தில் இருந்து அனுபவத்தின் மூலம் மாத்திரம் மேலே வரத்துடிக்கும் இளைஞர்களுக்கு அது மிகவும் பொருத்தமான இடம்.

மட்டக்களப்பு மாநகர வட்டாரங்களில் வெற்றி பெற்ற உறுப்பினர்களில் ஆகக்கூடுதலாக விருப்ப வாக்குகளை பெற்றவர் மதன். உள்ளூராட்சி சபைகள் இளைஞர்கள் கைகளில் வரவேண்டும் என்கிறார் இந்த முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்(2012).
மாநகரசபைக்கு சென்று தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு தடுமாறும் தனது வட்டார அப்பாவி மக்களுக்கும் சபைக்கும் இடையில் ஒரு பாலமாக செயலாற்றுவது மதனுக்கு தற்போது மிகுந்த மகிழ்ச்சியை தந்துள்ளது. வட்டாரத்துக்கான அடிப்படைச் செயற்பாடுகள், மாநகர உறுப்பினரான பொதுவான தேவைகள் ஆகியவற்றில் முன்னின்று உழைப்பது இவரது முக்கிய இலக்கு.

தெருவுக்கு விளக்கிடுவது, வடிகால் அமைப்பு, அறநெறி பாடசாலைகளை உருவாக்கல் என்று இவரது எதிர்பார்ப்புக்கள் நீண்டுகொண்டே போகின்றன.

மாநகரசபை ஊழியர்கள் எங்காவது ஒரு வடிகாலில் அடைப்பு எடுத்துக்கொண்டிருந்தால், தான் மாநகர உறுப்பினர் என்ற கோதா எதுவும் இல்லாமல் மதனும் இறங்கி வேலை செய்யத் தொடங்கிவிடுவார்.

இவரது அரசியல் நுழைவுக்கு தாய், தந்தை, சகோதரங்கள், நண்பர்கள் என்று அனைவரும் ஒத்துழைத்ததாக கூறும் இவரது வெற்றிக்கு இவரது பகுதி இளைஞர்களின் ஆதரவே முக்கிய காரணம் என்கிறார். இருக்கும் விளையாட்டுச் சங்கங்களை ஒன்றுபடுத்தி, ஒரு கூட்டமைப்பை உருவாக்கி, அதன் மூலம் உதவிகள் அனைத்து விளையாட்டு அமைப்புக்களுக்கும் பகிர்தளிக்கப்பட வேண்டும் என்கிறார். கபடி பயிற்றுனராகவும் பணியாற்றுகிறார்.

போரின் இறுதிக்காலத்தில் மட்டக்களப்பின் இளைஞர்கள் அனுபவித்த சகல இன்னல்களையும் வேதனைகளையும் அனுபவித்தே வளர்ந்து வந்துள்ளார், பயிற்றுனரை, சக நண்பர்களை வன்செயல்களுக்கு பலிகொடுத்து அனாதையாக நின்றிருக்கிறார். இன்றும் அதேவேதனையோடு மக்கள் பணியில் இறங்கியுள்ளார். மிகவும் இளைஞர்தான், வாழ்வின் அடிகள் தந்தபாடம் பற்றி நிறைய பேசுகிறார். அந்த அனுபவங்கள் இவரை சிறந்த சமூக சேவகராக்கட்டும். மாநகர சபையின் ஊடாக...


## கணிசமான அறவீடு



ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் ஆதரவுடன் மட்டக்களப்பு மாநகர சபை மேற்கொண்ட வரி அறவீட்டு மாத திட்டத்தின் முதற்கட்டத்தில் அறவிடப்படாதிருந்த கணிசமான வரி மீள அறவிடப்பட்டிருக்கின்றது.

இந்த வரி அறவீட்டு மாதத்தின் முதல் வாரம் இந்த திட்டம் குறித்த மக்களுக்கான அறிவிப்புகளுக்கு செலவிடப்பட்டது. ஒலிபெருக்கிகள் மூலமும், துண்டுப்பிரசுரங்கள் மூலமும் கோயில் மற்றும் தேவாலய அறிவிப்புகள் மூலமும் இந்த அறிவிப்பு மக்களை சென்றடையச் செய்யப்பட்டது. சுமார் பத்தாயிரம் துண்டுப் பிரசுரங்கள் வீடுகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

அதனை அடுத்து இந்த வார ஆரம்பத்தில், வரி அறவீடு ஆரம்பமானது. வாரத்தின் முதல் இரு தினங்களிலும் கணிசமான





வரி அறவிடப்பட்டதாக மாநகர சபை வட்டாரங்கள் மகிழ்ச்சி தெரிவித்தன.

முதல் நாளில் வீடுகளில் ஒரு லட்சத்து இருபத்தெட்டாயிரத்துக்கும் அதிகமான தொகை அறவிடப்பட்டது. மறுதினம் இரண்டு லட்சத்து அறுபத்தெட்டாயிரத்துக்கும் அதிகமான தொகை வசூலானது. அதேபோல வணிக நிறுவனங்களிடம் இருந்து இரண்டு லட்சத்து எண்பத்தினான்காயிரத்துக்கும் அதிகமான தொகை அறவிடப்பட்டதாக மாநகர சபை வட்டாரங்கள் மேலும் கூறின.

இந்த விடயத்தில் ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உதவி கணசமானது என்றும் அவை கூறின.

**ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது**

# கற்போம்

## கணிதம் கடினமல்ல ...


### இது உங்கள் கணிதம்

சகானா ஜோசப்

இந்த வாரம், நாம் கணித எண் வடிவங்களை கண்டுபிடிப்பது எவ்வாறு என்பது பற்றி கலந்துரையாடுவோம். இங்கே முக்கியமான சொல்(Key word) கண்டுபிடிப்பு. கணிதத்தின் வடிவங்களை சுய-கற்றல் மற்றும் ஆய்வு முறைகள் கணிதத்தின் ஒரு சிறந்த புரிதலை வழங்குகிறது.

ஒரு முக்கோண எண் தொடர் ஒன்றின் முக்கோணக் காட்சியின் விதிமுறைகளைக் அவதானிக்க, ஆரம்பத்தில் மூன்று புள்ளிகளுடன் ஒரு முக்கோணத்தை உருவாக்கவேண்டும். அதில் மேலே ஒரு புள்ளி மற்றும் கீழே இரண்டு புள்ளிகளும். அடுத்த வரியில் மேலும் மூன்று புள்ளிகளை சேர்த்து மொத்தமாக ஆறு புள்ளிகளை உடைய முக்கோணமும். அதற்கடுத்த வரிசையில் நான்கு புள்ளிகளை சேர்ந்ததாக, மொத்தம் 10 புள்ளிகளை உடைய முக்கோணத்தை உருவாக்கவும். இவ்வாறே அடுத்ததிலும் இறுதி வரிசையில் ஐந்து புள்ளிகள் இருக்கும், மொத்தம் 15 புள்ளிகள் உடைய முக்கோணம். என ஒரு முக்கோண வரிசை தொடங்குகிறது:

1 3 5 10 15




பயிற்சிகள் மாணவர்களுக்கு ஒரு நிதானமான அனுபவத்தை வழங்கும். நிச்சயமாக மாணவரால் வடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவை மாணவர்களுக்கு உந்துதலை உண்டாக்கும், அவ்வாறான வடிவங்களும் உள்ளன.

### கடந்தவார வினாக்களுக்கான விடைகளும் கணித்தல்களும்

$\frac{59049}{703040}$

$\frac{81}{1690}$ $\frac{729}{416}$

$\frac{6}{65}$ $\frac{27}{52}$ $\frac{27}{8}$

$\frac{2}{5}$ $\frac{3}{13}$ $\frac{9}{4}$ $\frac{3}{2}$

## நுண்ணறிவு 02

S.M வண்ணன்

01) 132, 253, 374, 495, …….
02) 312, 453, 5114, 6195, …….
03) 122, 236,3412,4520, 6530, ……..
04) 4, 16, 3, 27, 5, 25, 6, 216, 7 , …….
05) 3, 2, 4, 4, 12, 36, ……
06) 768, 870, 972, 1074, …….
07) 401,502,704,1007,1411, …….
08) 1, 4, 9, 61, 52, 63, ……
09) 1, 2, 3, 5, 6, 8, 10, 11, 15, ……, …….
10) 1, 2, 5, 10, 17, 28, ……...
11) 2, 1, 5, 8, 8, 27, 11, 64, ……. , ……
12) 0.1, 0.4, 0.9, 1.6, 2.5, …….
13) 123, 321, 160, 61, 451, ……
14) A, D, I, P, Y, ...…..
15) A, H, BG, FD, ……
16) C, D, G, E, F, K, G, H, ……
17) A, D, H, M, S, ……..
18) Z, X, U, Q, L ……
19) 0.01,0.11,0.32,0.65,1.11, ……
20) 11/2,21/2, 4, 6, 81/2, ……

பொறுத்தமற்றஎண்ணைதெரிவுசெய்க

------------------------------------------------------------

21) 196, 169, 144, 121, 101
22) 3, 10, 27, 4, 16, 64, 5, 25, 125
23) 25, 36, 49, 81, 121, 169, 225
24) 8, 17, 24, 37, 48, 65, 80
25) 1, 3, 10, 21, 64, 129, 356, 777

### இந்தவாரத்திற்குரிய கணிதப் புதிர்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | 7 | | | | | |
| | 3 | | | 6 | 2 | 8 | | |
| 2 | | | | 1 | | | 3 | |
| 9 | | | | | | | 8 | |
| | 7 | 5 | | 8 | | 6 | 4 | |
| | 1 | | | | | | | 2 |
| | 9 | | | 7 | | | | 4 |
| | | 2 | 6 | 3 | | | 1 | |
| | | | | | 8 | 9 | | |

## அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம்

### தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

குறுந்தொகையில் வரும் ஒரு செய்யுள். அது, ‘தச்சன் செய்த …’ என்று தொடங்கி, ‘செறிந்தன வளையே’ என்று முடிகின்றது. 6 வரிகளைக் கொண்டது. இதைப் பாடியவர் தும்பிசேர் கீரனார். ஒவ்வொரு செய்யுளையும் ஒவ்வொரு துறைக்குரிய செய்யுள் என வகைப்படுத்தியிருப்பர். அந்த வகையில் இது, ‘தோழி, தலைமகன் வாயில்களுக்கு உரைத்தது’ என்னும் துறைக்குரிய செய்யுளாகும். தலைவியைப் பிரிந்து தலைவன் பரத்தையிடம் செல்கிறான். இதைப் பரத்தையிற் பிரிவு என்றழைப்பர். பிரிந்து சென்ற தலைவன் சிறிது காலத்தின்பின் தலைவியிடம் வர விரும்புவான். நினைத்தவுடன் தலைவன் வந்துவிடுவதில்லை. தானாக வராமல் தனக்குரியவர்கள் மூலம் தலைவியிடம் செய்தி அனுப்புவான். செய்திகொண்டு வருபவர்களைத்தான் வாயில்கள் என்று கூறுவர். இச்செய்தியை ஏற்றுக்கொண்டால் அது, ‘வாயில் நேர்தல்’ எனவும் ஏற்றுக்கொள்ளாவிட்டால் ‘வாயில் மறுத்தல்’ எனவும் சொல்வர். அந்த வகையில் இது, வாயில் மறுத்தல் ஆகும்.

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்து இன்புறாஅர் ஆயினும் கையின்
ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல்
உற்று இன்புறேஎம் ஆயினும் நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன்புற்றெனம் செறிந்தன வளையே

இச்செய்யுளை உள்ளபடி வாசித்த பின்னர் பின்வருமாறு வகைப்படுத்தி வாசித்துப் பாருங்கள்.

1.தச்சன் செய்த சிறுமா வையம் ஊர்ந்து இன்புறாஅர்
2.ஆயினும்
3.கையின் ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல் உற்று இன்புறேஎம்
4.ஆயினும்
5.நற்றேர்ப் பொய்கை ஊரன் கேண்மை செய்து இன்புற்றெனம்
6.செறிந்தன வளையே

சிறிய குதிரை வடிவில் தச்சன் செய்த சிறு கைவண்டியில் ஏறி, அதைச் செலுத்திச் சிறுவர்கள் இன்பமடையமாட்டார்கள்.
என்றாலும்,
சிறுவர்கள் அவ்வண்டியைக் கையால் இழுத்து இன்பம் அடைவார்கள். அவ்வாறு அச்சிறுவர்களைப் போல் மெய்யுற்று நாம் இன்பமடையமாட்டோம்.
என்றாலும்,
நல்ல தேர்களையும் பொய்கைகளையும் கொண்ட, ஊர்த்தலைவனின் காதலை (நட்பை) மனத்தில் நினைத்து நினைத்து இன்பமடைந்தோம். எந்தக் கவலையும் எமக்கில்லை. சோகமும் இல்லை. இன்பமாய் வாழ்கிறோம். ஆதலால் தலைவி மெலியவில்லை.
அதனால்,
வளையல்கள் கழன்றுபோகாமல் வழமை போல் இறுகிக் காணப்படுகின்றன.
இவ்வாறு செய்யுள்களைப் பொருத்தமான முறையில் வகுத்து நோக்கும் போது வினாக்களுக்கு விடையளிப்பது சுலபமாக இருக்கும். சில வினாக்களை உருவாக்குவோம்.

1.இச்செய்யுளில் தலைவியின் எத்தகைய மனநிலை சித்திரிக்கப்படுகிறது?
2.இங்கு கையாளப்பட்டுள்ள உவமையை விளக்குக.
3.இது, யாரால் யாவருக்குக் கூறப்பட்டுள்ளது?
4.தோழி, பன்மையில் கூறுவதன் மூலம் வெளிப்படும் செய்தி என்ன?
5.தலைவனின் வாயில்களுக்குத் தோழி உணர்த்த விரும்பிய செய்தி என்ன?
6.தலைவனின் சிறப்பைக் கூறுக.
7.‘செறிந்தன வளையே’ என்னும் தொடரினால் உணர்த்தப்படும் செய்தி என்ன?

*இப்பகுதியில் எத்தகைய விடயங்களை எதிர்பார்க்கிறீர்கள் என்பதையும் வினாக்களையும் மாணவர்கள் அரங்கத்துக்கு அனுப்பிவைக்கலாம். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும்.*

## பொது அறிவு (இலங்கை)

என்.தனஞ்சேயன்

01) தேசிய கீதம் :“ நமோ நமோ தாயே “
- சிங்களத்தில் இயற்றியவர் : ஆனந்த சமரகோன் (1948 இல்)
- தமிழில் மொழிபெயர்த்தவர் : புலவர்மணி நல்லதம்பிப்பிள்ளை -
- ஆங்கில மொழிபெயர்ப்பு : உ.ற.ற. கன்னங்கர

02) தேசிய கொடி : வாளேந்திய சிங்கம் (1950 ல் வடிவமைத்தவர் - கோ்ணல் ஒல்கொட்)
03) தேசிய சின்னம் : 1972 குடியரசு ஆன பின்னர் மாபலகம விபுலசார மகா தேரரால் வடிவமைக்கப்பட்டது.
04) தேசிய மலர் : அல்லி
05) தேசிய மரம் : நாக மரம் (1986)
06) தேசிய பறவை : காட்டுக் கோழி
07) தேசிய மிருகம் : மரஅணில் / யானை
08) தேசிய விளையாட்டு : கரப்பந்தாட்டம்
09) தேசிய புனித மரம் : வெள்ளரசு
10) தேசிய உணவு : பால்ச் சோறு (2010 நவம்பர் 17)

பக்க அனுசரணை






# விளையாட்டு

## கோட்டைமுனை விளையாட்டுக் கழகத்தின் விசேட பொதுக்கூட்டம்

மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டுக் கழகத்தின் விசேட பொதுக்கூட்டம் ஒன்று 15.09.2018 (சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு கழகத்தின் தலைவர் பே. சடாற்சரராஜாவின் தலைமையில் சிங்கராஜா மண்டபத்தில் (சீலாமுனை யங்ஸ்டார் மைதானத்திற்கு முன்பாக) நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் அங்கத்தவர்களையும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் பதில் செயலாளர் செ. ரஞ்சன் கேட்டுள்ளார்.

## வெபர் உள்ளக விளையாட்டரங்கு திறந்துவைப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் பல திட்டங்கள் அண்மைக் காலமாக மேற்கொள்ளப்படுகின்றன.

அதில் ஒரு கட்டமாகக் கடந்த 6ஆம் திகதி மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் உள்ளக விளையாட்டு அரங்கு மாநகர முதல்வர் தி.சரவணபவான் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை விளையாட்டு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மட்டக்களப்பு வெபர் மைதான வளாகத்தில் 93 மில்லியன் ரூபாவில் நிர்மாணிக்கப்பட்ட உள்ளக விளையாட்டு அரங்கு, மட்டக்களப்பு மாநகர சபையால் பராமரிக்கப்படுவதற்காக மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் அவர்களிடம் கையளிக்கப்பட்டு, அவரால், திறந்து வைக்கப்பட்டது.

திறந்து வைக்கப்பட்ட உள்ளக விளையாட்டு அரங்கில், உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையின் அனுசரணையுடன் மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகம், மட்டக்களப்பு பூப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து பூப்பந்தாட்ட பயிற்சி முகாம் ஒன்றை அன்றைய தினம் ஆரம்பித்தது.

இந்நிகழ்வில் மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் கே. பாஸ்கரன், பிரதி மாநகர முதல்வர் கந்தசாமி சத்தியசீலன், மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலக உடல்கல்வி ஆசிரியர் ஆலோசகர் கே .ரவீந்திரன், பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

ஜெயா

## தேசிய மட்ட கபடி முதல் சுற்றில் பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயம் வெற்றி



தேசிய மட்ட கபடிப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. முதல் சுற்றுப்போட்டியில் 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் 26 - 16 என்ற கணக்கில் சோலவெவ மகா வித்தியாலயத்தை பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலய மாணவியர் வெற்றி பெற்று, அடுத்த சுற்றுக்கு தெரிவாகியுள்ளனர்.

20 வயதுக்குட்பட்ட போட்டியிலும் 19-03 என்ற கணக்கில் ரிவிசென்ன மகா வித்தியாலயத்தையும் வெற்றி கொண்டு அடுத்த சுற்றுக்கு தயாராகி வருகின்றனர்.

## விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணம் பகிர்ந்தளிப்பு



தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் பிரதியமைச்சர் அலி சாஹிர் மௌலானா அவர்களின் முயற்சியில் ஒரு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணம் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதியமைச்சர் அலி சாஹிர் மௌலானா அவர்களும் மட்டக்களப்பு கிரிக்கெட் சங்கத்தலைவர் திரு.ரஞ்சன் அவர்களும் கலந்து கொண்டு ஏறாவூரில் உள்ள 28 விளையாட்டு கழகங்களுக்கு கடினபந்து, மென்பந்து, உதைபந்து உபகரணங்களைப் பகிர்ந்தளித்தார்கள்.

## கால்பந்தாட்டத்தில் ஜொலிக்கும் படுவான்கரை வீரர்கள்

கௌரீசன்

மட்டக்களப்பின் கால்பந்தாட்டத்தில் போருக்குப் பின்னரான அண்மைய தசாப்தத்தில் படுவான்கரைப் பிரதேசத்தைச் சேர்ந்த கால்பந்தாட்ட வீரர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டும் நிலைமை வலுப்பெற்று வருவதனை அவதானிக்க முடிகின்றது.

படுவான்கரைப் பிரதேசத்தில் கிரமமாக நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இதற்கான அடிப்படையாக விளங்குகின்றது. படுவான்கரையில் சனி ஞாயிறு தினங்களில் கால்பந்தாட்டப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. கிராமங்களில் வாழும் மக்களின் ஒத்துழைப்புடன் கால்பந்தாட்டத் திருவிழாக்களாகவே இவை பெரும்பாலும் நடைபெற்று வருகின்றன. போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களுக்கு உணவு உபசரணை வழங்கி இக்கால்பந்தாட்ட விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இதன் காரணமாக திறமையான கால்பந்தாட்ட வீரர்கள் உருவாகுவதற்கான சூழல் வாய்க்கப்பெறுகின்றது.

இத்துடன் மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் முன்னிலை பெற்றுள்ள சில கழகங்களில் படுவான்கரை வீரர்கள் உள்வாங்கப்பட்டு கால்பந்தாட்டச் சங்கத்தின் உத்தியோகபூர்வ போட்டிகளில் பங்குபற்றி வருவதனாலும் படுவான்கரையினைச் சேர்ந்த கால்பந்தாட்ட வீரர்களின் திறமை மென்மேலும் வளருவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

இப்பின்னணியில் தற்போது மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தின் அங்கத்துவத்தினைப் பெற்று பட்டிப்பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம், இராமகிருஸ்ணா விளையாட்டுக் கழகம் என்பன கால்பந்தாட்டச் சங்கத்தின் போட்டிகளில் பங்குபற்றித் தமது திறமையினை வெளிப்படுத்தி வருகின்றன.

விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் வி பிரிவில் பதிவு செய்யப்பட்ட நிலையில் தரமுயர்த்தலுக்கான போட்டியில் முன்னிலை பெற்று முதல் வருடத்திலேயே ஏ பிரிவு அணிகளுள் ஒன்றாக முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
இவ்வாறு படுவான்கரையிலிருந்து தனியாகவும் அணிகளாகவும் கால்பந்தாட்ட வீரர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டும் நிலைமையானது மட்டக்களப்பின் கால்பந்தாட்டத்தினை மேலும் வலுப்படுத்தி வளமூட்டும் என கால்பந்து ஆய்வாளர்கள் நம்பிக்கை தெரிவித்து வருகின்றார்கள்.

## முனைக்காடு இராமகிருஷ்ணர் அணியினர் வெற்றி

தாந்தாமலை சிறிமுருகன் விளையாட்டு கழகம் தமது ஆண்டு விழாவை முன்னிட்டு அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை இம்மாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் சிறிமுருகன் விளையாட்டு மைதானத்தில் நடாத்தியது.

இதில் 24 கழகங்கள் கலந்து கொண்ட போதிலும் இறுதியில் முனைக்காடு இராமகிருஸ்ணர் அணியினர் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினர்.

இறுதிப்போட்டியில் கொக்கட்டிச்சோலை ஈஸ்வரா விளையாட்டுக் கழகமும் முனைக்காடு இராமகிருஷ்ணா விளையாட்டு கழகமும் மோதின. இரு அணிகளும் 1:1 என்கின்ற சமநிலையை அடைந்ததால் தண்டனை உதை வழங்கப்பட்ட போது அதில் முனைக்காடு இராமகிருஷ்ணர் அணியினர் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றி இருந்தனர். இரண்டாமிடத்தை கொக்கட்டிச்சோலை ஈஸ்வரா விளையாட்டு கழகமும், மூன்றாமிடத்தை காஞ்சிரங்குடா நாக ஒளி விளையாட்டுக் கழகமும், நான்காமிடத்தை பன்சேனை உதைஒளி விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன. இந்நிகழ்வில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ வியாழேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிவைத்தார்.

## காத்தான்குடி போட்டியில் ஏறாவூர் இளம்தாரகை சாம்பியன்



காத்தான்குடி உதைபந்தாட்ட சங்கம் நடாத்திய 2018ஆம் ஆண்டிற்கான மின்னொளி உதைபந்தாட்டத் தொடரில் ஏறாவூர் இளம்தாரகை வெற்றி பெற்றது.

மருதமுனை கிறீன் மெக்ஷ் அணியுடனான இறுதிப்போட்டியில் 1-0 என்ற கோல் அடிப்படையில் அவர்கள் வெற்றிபெற்றனர்.

இளம்தாரகை அணி கிண்ணத்தை தனதாக்கியதுடன் 50000 ரூபாய் பணப்பரிசையும் பெற்றுக்கொண்டது.

இந்நிகழ்வுக்கு நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ கலாநிதி எம். எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் மற்றும் தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் பிரதி அமைச்சர் கௌரவ செய்யித் அலிசாஹிர் மௌலானா ஆகியோர் கலந்து கொண்டு பரில்களை வழங்கி வைத்தனர்

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்


Koddamunai Sports Club
Batticaloa

# மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம்

தோற்றுவாய்:
------------------------

'தமிழ் மக்களது தொன்மை மிக்க வாழ்வியலில் அவர் தம் மொழியும், அம் மொழியைப் பேணி வளர்த்த சங்கங்களும் பின்னிப்பிணைந்தவையாய் இருந்துவரக் காண்கின்றோம். நல்லியற் புலவர்கள் சங்கங்களிலமர்ந்து ஆய்ந்து வளர்ந்தமையால் தமிழ் மொழிக்குச் சங்கத் தமிழ் என்பது காரணப் பெயராயிற்று. சங்ககாலம், சங்கமருவிய காலம் எனக் குறிப்பிடப்படும் காலங்களிலும் அதன் பின்னரும், பல்லவர் காலம், சோழப்பேரரசர் காலம், இரண்டாம் பாண்டியப் பேரரசர் காலங்களிலும் புலவர் பெருமக்கள் பலர், மன்னர்களின் அனுசரணையுடன் தமிழ் மொழியைப் பேணி வளர்த்துள்ளனர் .

பிற்காலத்தில் கூட யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகள், தமிழ்ச்சங்கம் ஒன்றினை நிறுவி தமிழ் மொழியைப் பேணி வளர்த்தமையையிட்டு அறிகிறோம். 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில், அதாவது 1898இல் யாழ்ப்பாணத்திலே தமிழ்ச்சங்கம் ஒன்று நிறுவப்பட்டமையும் 1901 இல் மதுரையிலே நாலாவது தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டமையும் 1911 இல் கரந்தையிலே தமிழ்ச்சங்கம் ஒன்று நிறுவப்பட்டமையும் 1921 இல் யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம் இலங்கை அரசின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டமையும் 1924 இல் கொழும்பிலே திருக்குறள் பயிற்ச்சிக்கழகம் என்னும் பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பானது 1942 இல் கொழும்புத் தமிழ்ச்சங்கம் என்னும் பெயருடன் செயற்படத் தொடங்கியமையும் தமிழ் மக்களின் வாழ்விலே தமிழ்சங்கங்கள் பெற்றுள்ள முக்கியத்துவத்தைப் புலப்படுத்துகின்றன.



மேலே சுட்டப்பட்ட பின்னணியிலேதான் மட்டக்களப்புத் தமிழகத்திலும் தமிழ்ச்சங்கம் ஒன்று அமைவது காலத்தின் தேவை என்பது உணரப்படலாயிற்று.
பேராதனைப் பல்கலைக் கழகத்திலே தமிழ்வித்துவான் பயிற்சிபெற்ற 1957-59 காலப்பகுதியிலே எனது பெருமதிப்புக்குரிய ஆசிரியர் பிரான் பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்களால் தவத்திரு விபுலாநந்த அடிகளாரின் இனிய நினைவுக்குள் நான் ஆற்றுப்படுத்தப்பட்டதோடு, காத்திரமான தமிழ் உணர்வும் எனக்குச் சித்திக்கலாயிற்று. மீண்டும் கலைப்பட்டதாரித் தேர்வுக்கான கற்றலை மேற்கொண்டிட பேராதனை சென்றிருந்த 1963-66 காலப்பகுதியிலே என் அடிமனதில் ஆழமாகப் பதிந்திருந்த "மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம்" என்னும் கனவு உறுதிநிலையடைய, என் ஆசிரிய பிரான் பேராசிரியர் செல்வநாயகம் அவர்களே தூண்டு கோலாக இருந்தாரென்பதனை இன்றும் மறக்கவில்லை - என்றும் மறவேன் என்பதனைத் தன்னடக்கத்துடன் கூறிட விழைகிறேன்,'

இது, என்னுடைய தமிழ் ஆசான் மதிப்பிற்குரிய தமிழ் ஒளி வித்துவான் செபரெட்னம் ஐயா அவர்கள் எனக்கு எழுதிய கடிதம் ஒன்றின் பகுதி.
அவர் பின்வருவனவற்றையும் அதில் வலியுறுத்தியிருந்தார்.

1967 இல் மட் / பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலத்தில் ஆசிரியராகச் சேர்ந்த போது எனது தமிழ்ச்சங்க கனவினை நனவாக்கிடும் பணியினை மேற்கொண்டேன்.

1. மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்ந்து கொண்டிருந்த அறிஞர் பெருமக்களிற் பலருடன் நேரடியாகவும் கடித மூலமும் தொடர்பு கொண்டேன்.

2. 1967 ஆகஸ்ட் மாதத்தில் ஆலோசனைக் கூட்டம் இடம்பெற்றது. பண்டிதர்கள், புலவர்கள், ஆசிரிய சிரோமணிகள், சைவப்புலவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் பங்கு கொண்டனர்.
மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத்தினை களுவாஞ்சிக்குடியில் அமைப்பதெனவும் நவம்பர் 1967 தீபாவளித் தினத்தன்று பொதுக்கூட்டத்தினை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

3. 01.11.1967 சனிக்கிழமை தீபாவளித் தினத்தன்று மட் / பட்டிருப்பு ம.ம.வி. யில் பொதுக்கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. செ.கதிர்காமநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்ச்சங்கத்தையிட்ட விளக்கம் என்னால் கூறப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் சி.மூ.இராசமாணிக்கம், புலவர்மணி ஏ.பெரிய தம்பிப்பிள்ளை, ஆசிரியர் சிரோமணி வே.சாமித்தம்பி, ஆரையம்பதி ந.ஆழகேச முதலி, வாழைச்சேனை செ.இளையதம்பி, அல்ஹாஜ், ஆ.மூ.ஸரீபுதீன், காரைதீவு வி.ரி. செல்லத்துரை உட்பட பலரும் சங்கத்தின் அவசியம் பற்றி உரையாற்றினர்.
தொடர்ந்து பின்வரும் தேர்வுகள்இடம்பெற்றன:

காப்பாளர்கள் :-
01.திரு.சே.கதிர்காமநாதன்.(அரச அதிபர்)
02.திரு.சி.மூ.இராசமாணிக்கம் (பா.உ)
03.ஆசிரிய சிரோமணி வே.சாமித்தம்பி
தலைவர்:-

## தூணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!

புலவர் மணி ஏ.பெரியதம்பிப்பிள்ள

உதவித் தலைவர்கள்:-
01.திரு.ஆ.மு.ஸரிபுதீன்
02.பண்டித வித்துவான் வி.சீ.கந்தையா
03.அதிபர்.திரு.செ.இளையதம்பி - வாழைச்சேனை

பொதுச்செயலாளர் :-
வித்துவான் க.செபரெத்தினம்

பொருளாளர்:-
திரு.க.தம்பாப்பிள்ளை பிரசித்த நொத்தாரிஸ்

பிரதேச செயலாளர்கள் :-
பொத்துவில் - கவிஞர் யுவன்

**சைவப் புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி**
**தலைவர், மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம்**

அக்கரைப்பற்று- ஜனாப் அ.ஸ.அப்துல் சமது
கல்முனை - கவிஞர் நீலாவணன்
மூதூர் - கவிஞர் அண்ணல் - சாலிஹ்
திருகோணமலை - திரு.வ.அ.இராசரத்தினம்

பதினைவர் அடங்கிய செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

தமிழ்ச்சங்கத்துக்குரிய அமைப்பு விதிகளைத் தயாரிப்பதற்கென மூவர் அடங்கிய குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது .

4. 01.12.1967 இல் மட் / பட்டிருப்பு ம.ம.வி. யில் கூட்டப்பட்ட விசேட பொதுக்கூட்டத்தில் அமைப்பு விதிகள் வாசித்து விளக்கம் கொடுக்கப்பட்ட பின் அவை ஏற்கப்பட்டன .

5.ஆற்றப்பட்ட பணிகள் :-
அ) ஜனவரி 1968 தொடக்கம் தமிழ் இலக்கண வகுப்புக்கள் கல்முனை, கல்லாறு, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு, வாழைச்சேனை ஆகிய இடங்களில் நடாத்தப்பட்டன. இதற்கு கிழக்குப் பிராந்திய கல்விப்பணிப்பாளரின் அநுசரணை பெறப்பட்டது. தகுதிவாய்ந்த அறிஞர்கள் ஊதியம் பெறாது கற்பித்து வந்தனர்.

ஆ) மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்தி வந்த பண்டிதர் மற்றும் புலவர் தேர்வுகளை, அச் சங்கத்துடன் இணைந்து நடத்திட ஒப்புதல் பெறப்பட்டது.

இ) ஜனவரி 1969 தொடக்கம் பொதுக்கலை தகுதித் தேர்வுக்கான வகுப்புக்கள் மாவட்டத்தில் பல இடங்களில் நடத்தப்பட்டன.

ஈ) அம்பாறைக் கச்சேரியில் உயர் பதவி வகித்துக் கொண்டிருந்த பெரிய கல்லாற்றைச் சேர்ந்த திரு. கிறிஸ்ரி செல்லப்பா அவர்களின் களுவாஞ்சிக்குடியிலிருந்த காணி ஒன்று தமிழ்ச்சங்கப்பணிமனை, கூட்டமண்டபம் ஆகியவற்றினை அமைத்திட அன்பளிப்பாகப் பெறப்பட்டது.

உ) காணி துப்பரவு செய்யப்பட்டு சுற்றிவர முட்கம்பி வேலி அடைக்கப்பட்டது.

ஊ) சங்கக்காணியில் சங்கத்தின் பெயர்ப்பலகை நிறுவப்பட்டு திரைநீக்கஞ் செய்யப்பட்ட நிகழ்ச்சி சங்க உறுப்பினர்கள் பலர் பங்கேற்று விழாவாக இடம்பெற்றது.

எ) சங்க உறுப்பினரான குருமண்வெளியினைச் சேர்ந்த பிரபல செல்வந்தரான திரு. செ.திருச்செல்வப்போடியார் அவர்கள் தமது அமரத்துவமடைந்த சகோதரரான திரு.செ.திருத்தணிகாசலம் அவர்களின் நினைவுச்சின்னமாக கிணறு ஒன்றினைச் சங்கக்காணியில் அமைந்து தந்தார்.

ஏ) சங்கப்பணிமனை மற்றும் கூட்டமண்டபம் ஆகியவற்றிற்கான மாதிரி அமைப்பு வரையப்பட்டு, மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி சிறியதொரு விழாவாக இடம்பெற்றது.

ஐ) 01.11.1968, 01.11.1969, 01.11.1970 ஆகிய நாள்களில் சங்கத்தின் ஆண்டுக் கூட்டங்கள் நடைபெற்றன. சங்கத்தின் அதே உத்தியோகத்தர்களே தொடர்ந்தும் கடமை ஆற்றிட கூட்டங்களில் அங்கிகாரம் அளிக்கப்பட்டது .

ஒ) விபுலானந்த அடிகளாரின் நினைவுதின நிகழ்ச்சி, சங்கத்தின் சார்பில் பட்டிருப்பு ம.ம.வி இல் சிறப்பாக நடத்தப்பட்டது. 1969இல் சங்கத்தலைவர் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களும், 1970 இல் பண்டிதர், சைவப்புலவர் வி.ரி.செல்லத்துரை அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாளர்களாகப் பங்கேற்றனர்.

6. பிரதேச அபிவிருத்தி அமைச்சராகக் கடமையாற்றிய திரு இராசதுரை அவர்களும் தபால், தந்தி தொடர்பு அமைச்சராக கடமையாற்றிய திரு.குமாரசூரியர் அவர்களும் சங்கக் கட்டடங்களை அமைப்பதற்கும் சங்க வளர்ச்சிக்கும் நிதி உதவிசெய்திட முன்வந்த போதிலும் நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மையால் அவர்களின் உதவியைப் பெற்றிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டதோடு சங்கசெயற்பாடுகளிலும் தடை ஏற்படலாயிற்று. என குமாரசூரியர் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு எனக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதன் தொடர்ச்சியாக மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கமானது வித்துவான் செபரெத்தினம் ஐயா அவர்களின் முழு முயற்சியிலும் முன்னீட்டிலும் மீளமைக்கும் பணி 2009இல் முன்னெடுக்கப்படலாயிற்று.

**தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்காக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர், புரவலர் விநாயமூர்த்தி ரஞ்சிதமூர்த்தியின் சமர்ப்பணம் இந்தப் பக்கம்.**



# காலம்தோறும் உயிர்க்கும் இராவணன் மற்றவரை உயிர்ப்பிக்கும் இராவணன்

## இராவணனும் நானும்-2



1963 ஆம் ஆண்டில் இராவணேசன் நாடகத்தை எழுதும் பெரும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்து வழியும் காட்டினார் எனது குருநாதர் பேராசிரியர் வித்தியானந்தன். எழுத ஆலோசனைகள் வழங்கினார் பேரா. சிவத்தம்பி

அதிலே இராவணன் வரவை நான் இவ்வாறு எழுதினேன்.

மும்மூர்த்திகளையோட்டி இம்மாநிலத்திலே

முரசறைந்தேயிருந்தோன்

மூவுலகை ஆண்டவன் பாவுலகில் வாழ்பவன் முடிபத்து தலையணிந்தோன்

இம்மென்னு முன்னமே தேவர்களை சிறையிட்டுஇம்சித்து மகிழ்ந்திருந்தோன்

இந்திரஜித் எனுமொரு வீரனை இவ்வுலகில்

ஈன்றெடுத்தே வளர்த்தோன்

திரிபுர மெரித்த ஒரு விரிசடைக் கடவுளின்

திறமான பக்தனாவான்

உரமுள்ள நெஞ்சோடு உலகெங்கும் ஆழ்கின்ற

வரம் பெற்று வாழ்ந்திருப்போன்

தொம்மென்று முரசங்கள் தாளமதிசைத்திடத்

தோகையர் கவரி வீசத்

துடி துடித் தோடிடத் தேவர்கள் சபை மீது இராவணன் வருகின்றானே

தரு
----------
வானவர் தானெனக் கீடோ- மற்றும்
வலுவுள்ள மானிடர் தானென்ன சோடோ
யானை பொரும் பெரு மார்பன்-- என்னைத்
தாவிச் சமர் செய்வார்க்கு நாசம் தப்பாது

இதிலே இராவணன் தான் தேவரை அடக்கி ஆண்டதையும், தனது மஹா வலிமையையும் கூறுகிறான். அதோடு தான் ஒரு சிவ பக்தன், தான் ஒரு பெரு வீரனின் தந்தை எனவும் பெருமையோடு தன்னை அறிமுகம் செய்கிறான். இதில் நானே இராவண வேடமும் தாங்கினேன், அப்போது எனக்கு வயது இருபத்தியொன்று. பேராதனை பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்தேன், இராவணன் இலங்கையை ஆண்ட தமிழ் மன்னன் இணையில்லா வீரன் என்ற கருத்துருவே அன்று எனக்குள் இருந்தது .

40 வருடங்களுக்குப் பின் அந்த நாடகத்தைத் திருத்தி புதுப்பித்து எழுதியபோது பழைய இராவண பாத்திரம் மாறியது.

அவன் மனைவி மண்டோதரி அவனிடம் நீ செய்வது அதர்மம் என்று கூறும்போது தான் செய்வது அதர்மம் அல்ல தர்மம் என வாதிடும் இராவணனாகவும் அந்தத் தர்மத்தைக் காக்கப் போர் புரியும் இராவணனாகவும் அவனை உருவாக்கினேன், அவன் இப்படி பேசுவான்

தங்கை சூர்ப்பனகை தன்காதல் உரைக்க

தம்பியும் அண்ணனும் பகிடிகள் பண்ணினார்

அதற்கு மேல் சென்று மூக்கையும் அரிந்தார்

மூக்கை மட்டுமா என் தங்கை முலையையும் அறுத்தார்


பதிலுக்கு நானும் அவர் பெண்ணைக் கவர்ந்தேன்

அவள் உருப்பு ஏதும் அரிந்தேனா? இல்லையே

அத்ர்மம் செய்வது யார் நானா? அவனா

என்று கூறி தான் இராமனுக்கு எதிராக நடத்தும் போர் தர்மப்போர் என மனைவியுடன் வாதிடுகிறான். இந்த இராவணன் சீதையை விட்டு விடும்படி மனைவி கேட்க, இராமனைப் போரில் வென்ற பிறகு அவன் மனைவியை அவனிடம் ஒப்படைக்கிறேன் என்று கூறிப் போருக்குச் செல்வான். இந்த இராவணன் இரண்டாம் முறை இராமனுடன் போர் புரியப் போகையில்;

மைந்தனொடு தம்பி சுற்றம் சேனா வீரர்




மற்றுமுள படைகளெல்லாம் மாய்ந்த பின்னர்

இந்த உயிர் இராகவனின் தாள் பணிந்து

இருந்திடுமா, இருக்காது உணர்க பெண்ணே

இன்று போய் நாளை வா என்று சொன்ன அவனைக் காண்பேன்

இதோ பார் நான் மீண்டும் வந்தேன் என்பேன்

ஒன்றில் நான் இல்லை அவன் இதுதான் நீதி

உணர்ந்திடுக வழி விடுக எனது பெண்ணே

எனக்கூறுகிறான்.

எல்லோரையும் இழந்த பிறகு இராமனின் கால் தொழுது வாழ்வேனோ? ஒன்றில் நான், இல்லை அவன் எனச் சூழுரைத்துக் களம் புகுந்து இறக்கிறான். மாவீரன் இராவணனாக அவன் இதில் சித்தரிக்கப்படுகின்றான்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

---

"தலையில் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையில் இழிந்தக் கடை"

வீரம், விவேகம், துணிவு, பயிற்சி, தந்திரம், இவற்றின் ஒப்பற்ற விளைவாக திகழ்ந்த இந்த தளபதியை உலகமே வியந்து நோக்கியது. ஒரு காலப்பகுதியில் மட்டக்களப்பு போராளிகளுடன் யாழ் வன்னி போராளிகளும் கலந்து மட்டக்களப்புக்கு போகவேண்டிய சூழ்நிலை உருவானது. என்ன நினைத்தாரோ தலைவர் மிக முக்கியமான உளவுத்துறை நிபுணர்களை அவர்களுடன் கலந்துவிட்டிருந்தார். முக்கிய தளபதிகள் இருவர் மட்டக்களப்பு திருகோணமலைத் தளபதிகளாக நியமிக்கப்பட்டனர். அங்கேயும் மட்டக்களப்பின் துணைத்தளபதிகளுக்கு சிறு நிர்வாகப்பரப்பையே கொடுக்க முடிந்தது.. பெருமளவு வீரர்களுடன் சென்றிருந்த தளபதிகளை திடீரென திருப்பியழைக்க மட்டக்களப்பின் மீது தமது கட்டுப்பாட்டை புலிகள் இயக்கம் இழந்தது. பல நுட்பமான புலனாய்வாளர்களை பொறிவைத்துப்பிடித்து கொன்று போட்டனர். மட்டக்களப்பு வடக்குடன் தனக்கிருந்த உறவுகளை முறித்துக் கொண்டது.

நான் அரசியல் ஆய்வுகளையோ அல்லது இராணுவ ஆய்வுகளையோ செய்ய வரவில்லை. எனக்கு தெரிந்த எளிமையான தளபதியைப்பற்றி மட்டுமே பேச விளைகிறேன். அது இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு மட்டக்களப்பிலே ஒரு மாதர் மாநாடு நடந்தது. விடுதலைப்புலிகள் மகளிர் அணியால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அந்த மாநாட்டில் ஒரு பேச்சாளராக நானும் போயிருந்தேன். ஒரு பெரிய மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அந்த கூட்டத்துக்கு நான் போய் வெளியே நின்றிருந்தபோது மட்டக்களப்பின் சில முக்கிய போராளிகள் என்னை சந்தித்தனர். வரணுமாம் சொல்லிவிடச் சொன்னாங்க" மாலையில் வன்னியிலிருந்து வந்திருந்த அனைவருக்குமே ஆடல்பாடல்களுடன் விருந்தும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நானும் போனேன் என்னை கைலாகு கொடுத்து வரவேற்றவர், தன்னருகே ஒரே மேசையில் உண்ணப்பணித்தபோது, எமது பொறுப்பாளரின் முகம் கறுத்ததை நான் அவதானித்தேன். நான் அவளுக்காக அந்த இடத்தை அளித்துவிட்டு அருகிலிருந்த மேசைக்கு மாறினேன்.

இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைக்கூற வேண்டும். அந்த தளபதியின் மனைவி ஒரு ஆண்குழந்தையை பெற்றிருந்தார்.; பாதுகாப்புக்கருதி அவர் வன்னியிலிருந்தார்; நான் அடிக்கடி அந்தக்குழந்தையை பார்த்திருக்கிறேன். ஆனால் குழந்தை பிறந்து பத்துமாதங்களாகியும் அந்த தளபதிக்கு குழந்தையை பார்க்க கிடைக்கவில்லை. நான்தான் அவருக்கு அவருடைய மகனின்



எத்தனை விடயங்களை தியாகம் செய்யவேண்டியுள்ளது. மேலோட்டமாகப் பார்த்தால் உடல் உறுப்புகள் உயிர் என்றளவில் பேசப்படும் விடயம் மட்டுமா? உறவுகள் நிகழ்வுகள் பாசம் பிணைப்பு பரிமாற்றம் இவற்றுக்கெல்லாம் மேலாக தமது நியாயமான ஆசைகளையும் விருப்பங்களையும் கூட தியாகம் செய்ய வேண்டியுள்ளது.

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 29

வேண்டியபோது அவர்கள் தமது வீரர்களுடன் திரும்பினர். காலமும் திரும்பியது.

சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் மீண்டும் மரத்திலேறி அங்கிருந்த உடலை வெட்டி வீழ்த்தினான். வேதாளம் தன் கதையை ஆரம்பித்தது. கதை முடிவில் கேட்கப்படும் கேள்விக்கு விடை தெரிந்தும் சொல்லாது போனால் விக்கிரமாதித்தனின் தலை வெடித்து சுக்குநூறாகிவிடும்; மட்டக்களப்பார் அந்தவகையில் வேதாளத்தை பேண விரும்பவில்லை அவர்களின் முடிவு வேறுவிதமாக இருந்தது.

" அன்ரீ, அவர் தனக்கு வர முடியாமப் பொச்சிண்டு கவலைப்பட்டார் எண்டு சொல்லட்டாம் எங்களை அவர்தான் வெரட்டிவிட்டாரு..போய் அவட பேச்சக் கேளுங்கடா அதுக்கப்பறமாவாது பொம்பிளைங்களை மதிப்பீங்க ...நல்லா பச்ச பச்சயாத்தான் கேப்பாக இண்டு சென்னாரு"

எனக்குப் புரிவேயில்ல அதென்ன "பச்சபச்சயா"... அவர்கள் பொறுமையாக இருந்து கேட்டபின் பாராட்டினார்கள்".

"அம்மா நீங்க அந்திக்கு நடக்கிற தேனகம் விருந்துபசாரத்துக்கும் குழப்படிகளைப்பற்றி கூறினேன். ஆர்வமாக கேட்டார். "வரணுமன்ரீ அவனைப்பாக்கணும்" என்று ஆவலோடு கூறினார்.

சொன்னபடி இருமாதங்களின் பின் வன்னிக்கு வந்தவர் தன் மகனைச் சுமந்தபடி எனது உறவினர் வீட்டுக்கு வந்தார். நான் அங்குதான் தங்குவது வழக்கம்; எனவே அவர்களை தக்கபடி உபசரித்தேன். அளாவளாவினேன். புள்ளைகளைப்பற்றி பெருமையாகப்பேசினார். மாவீரரான என் உறவினரின் மரணச்சடங்குகளுக்கும் அவர் வரவில்லை அந்த வருந்தலையும் இப்போதுதான்; அந்த குடும்பத்தினருக்கு தெரிவித்தார்.; போர் எத்தகைய இழப்புகளை தருகிறது. போராளிகள்

**தமிழ்க்கவி**

ஒரு போராளி நல்ல "சண்டைக்காய்; என பாராட்டப்பட்டவன் திடீரென்று தன் விலகல் கடிதத்தை கொடுத்து விலகிவிட்டான். பின்னர் அவன் மிதிண்டியில் தேங்காய் கட்டி ஊரூராக கொண்டு சென்று விற்று சீவியம் செய்தான். "பஜீரோவிலும் பிக்அப்பிலுமாக திரிஞ்ச உனக்கு இந்த வேலை ஏன்?"; என்று கேட்டேன்.

" ஒண்டுமில்லை எனக்கு சராயம் குடிக்க வேணுமெண்ட ஆசை வந்துது நானும் அடக்கிஅடக்கிப் பாத்தன் ஏலாது அதுதான் விலகீட்டன்" என்றான். இஞ்ச என்ன நடந்திருக்கும்?

மனச்சோர்வுடைய சிலர் நோயின் கடுமையினால் எதுவும் கதைக்காமல், ஒன்றிரண்டு முறைப்பாடுகளைக் கூறுவதுடன் நின்று விடுவர். இவர்கள் உண்மையிலேயே தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளும் அளவிற்கு ஆபத்துமிக்கவர்கள். நோயாளியுடனான முதற் சந்திப்பின்போதே, அவர் தற்கொலை செய்யும் எண்ணத்தில் இருக்கிறாரா? என்பதை கண்டறியவேண்டும். தற்கொலை எண்ணத்தை அறிவது தற்கொலைக்கு இட்டுச்செல்லும் என்ற எண்ணம் தவறானது.

அவரிடம் பின்வருமாறு வினவலாம்; இனி வாழுறதில பிரயோசனமில்லை என்று நினைக்கிறீர்களா? இப்படி இருக்கிறதை (குரல்கள்) கேக்கிறதா?". இப்படியான குரல்களைக் கேட்கும் ஒருவரிடம், அந்தக்குரல்கள் அவரைத் தற்கொலை செய்யும்படி கூறுகின்றனவா எனக் கேட்கவும். அப்படி இருந்தால், "உங்களைத் தற்கொலை செய்யச் சொல்லுற அந்தக் குரல்களின் கட்டளைகளை உங்களால் எதிர்க்க முடிகிறதா? என்று கேட்கவும். மனச்சோர்வுடைய சிலர் இறப்புடன் தொடர்புடைய எண்ணங்களால் குழப்பமடைந்து இருப்பார்கள். உதாரணமாக, அவர்கள் இறந்தவர்களை கனவில் காணலாம். பிரேதவாடை வீசுவது போல உணரலாம் அல்லது தங்களது உடம்பு படிப்படியாக அழிந்து போவது போல உணரலாம். எங்கள் குடும்பத்தினது உடையவர்களுக்கு எவ்வாறு உதவலாம்?

நீங்கள் சந்திக்கின்ற அந்த நபர் தற்கொலை செய்யக்கூடியவரா என்று ஆராய்ந்து பார்க்கவும். கீழ் வரும் விடயங்களில் ஏதாவது ஒன்று அல்லது பல அவரில் இருக்கின்றதா எனக் கண்டறியவும். அப்படி ஏதாவது இருக்கும் பட்சத்தில் அவர் தற்கொலை செய்யக்கூடிய அபாயம் அதிகளவு இருக்கின்றது எனக் கொள்ளலாம். ஒருவர் ஏற்கனவே தற்கொலை முயற்சி ஒன்றில் ஈடுபட்டிருந்தால், அம்முயற்சி எவ்வளவு பாரதூரமானதாக இருந்தது என்று கணிப்பிடவும், மேற்கூறிய விடயங்களின் தொகுப்பை பாவித்து, அவர் இன்னமும் தற்கொலை புரியக்கூடிய ஆபத்தில் இருக்கிறாரா என்று மதிப்பிடவும்.

தற்கொலை செய்யக்கூடிய அபாய அறிகுறிகள்

# கட்டிளமைப் பருவ உளநலம்

## தற்கொலையை தடுப்பது எப்படி?

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

விடச் சாகலாம் எண்டு விரும்புறீங்களா? ஏதாவது செய்து செத்துப்போனால் நல்லது எண்டு யோசிக்கிறீங்களா? அப்பிடி ஏதாவது திட்டங்கள் இருக்கா? முந்தி ஏதேனும் செய்து பார்த்தனீங்களா? என்று கேட்கலாம். முன்பு செய்து கொண்ட தற்கொலை முயற்சியைப்பற்றிக் கேட்டறியவும். (இது,



இனி வருங்காலத்தில் அவர் தற்கொலை செய்யக்கூடிய சாத்தியக்கூறுகளை எதிர்வு கூறுவதுடன், அவர் எவ்வாறான முயற்சிகளில் ஈடுபடக்கூடும் என்கின்ற ஒரு கணிப்பையும் உங்களுக்கு தரும்). கடும்மனச்சோர்வுடையோர் உண்மையான தூண்டுதல்கள் இல்லாமலேயே பார்த்தல், கேட்டல், மணத்தல் போன்ற புலனுணர்வுகளை அனுபவிக்கலாம். இவற்றை மாயப்புலனுணர்வுகள் என அழைப்போம். இதனை உறுதி செய்வதற்காகப் பின்வருமாறு கேட்கலாம்."சில வேளைகளில் ஒருவரும் இல்லாது இருக்கேக்கை, ஆரோ உங்களோடை கதைக்கிற மாதிரி

எல்லா விதமான துரதிர்ஷ்டங்களுக்கும் நாங்களே பொறுப்பு, நாங்கள் பெரிய பிழை விட்டு விட்டோம். போன்ற தவறான, ஆனால் உறுதியுடன் பேணப்படுகின்ற போலி நம்பிக்கைகளை சில மனச் சோர்வு நோயுடையவர்களில் அவதானிக்கலாம். இவ்வகைபட்ட தவறான நம்பிக்கைகளை அவர் கொண்டிருக்கிறாரா என்பதைப்பற்றி, அவர்களது குடும்ப உறுப்பினர்களைக் கேட்கவும். சில வேளைகளில் இவ்வாறான போலி நம்பிக்கைகள் அவரது உடல் சம்மந்தமானதாகவும் இருக்கலாம். உதாரணமாகத் தனக்குப் புற்று நோய் வந்துவிட்டது என்று எந்தவித ஆதாரமும் இன்றி அவர் நம்பலாம். நோயாளர்களிடம் மாயப் புலனுணர்வுகள், போலி நம்பிக்கைகள் என்பன மேலோங்கிக் காணப்படுமிடத்து, அவர்கள் உளம் மாய நோய்க்குட்பட்டிருக்கக் கூடிய சாதிதியக்கூறுகள் இருக்கின்றன என்பதையும் மறந்துவிடலாகாது. சில வேளைகளில் உளமாய நோய்கள் மனச்சோர்வின் அறிகுறிகளுடனும் தொடங்கக்கூடும். மாறாக இவர்கள் "உளமாய மனச்சோர்வு" என அழைக்கப்படும். கடுமையான, அவசரமாகச் சிகிச்சையளிக்கப்படவேண்டிய உளநோயினால் பாதிப்புற்றும் இருக்கலாம். இவ்வாறான நிலைகளில் உளமருத்துவ உதவியை உடனடியாக நாடுவது நன்று.

தற்கொலை செய்யும் எண்ணம்

மிக அதிகளவான விரக்தியோடிருத்தல். தங்களுடைய இறப்புப் பற்றி நேரடியாகவோ, மறைமுகமாவோ கதைத்தல் அல்லது எழுதுதல், தற்கொலை நேக்கத்திற்காக நஞ்சு, மருந்துக்குளிசைகள், விதைகள் போன்றவற்றை வைத்திருத்தல் அல்லது அவை இலகுவில் கிடைக்கக்கூடிய வழிவகைகளைப்பற்றிச் சிந்தித்தல்.

முன்பு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருத்தல், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் யாராவது தற்கொலை செய்து இறந்திருத்தல். நாட்பட்ட அல்லது அந்திமகால நோய் ஒன்றினால் பீடிக்கப்பட்டிருத்தல். அந்த ஊரில் யாராவது தற்கொலை செய்து உயிர் இழந்திருத்தல். அவரைத் தடுக்கவோ, பாதுகாக்கவோ ஒருவரும் இல்லாத ஒரு தனிமையான சூழ்நிலையிலிருத்தல். மது போதைவஸ்து போன்றவற்றைப் பாவித்தல். குடும்பம், சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்ட ஒருவர். உண்மையாக ஒன்றும் இல்லாத போதே கேட்டல், பார்த்தல், மணத்தல் போன்றன இருப்பதாகக் கூறல் (மாயப் புலனுணர்வுகள்). தங்கள் குடும்ப உறுப்பினர்களையோ, தங்களையோ கொல்லக்கூடிய விரிவான திட்டத்தை வைத்திருத்தல். தற்கொலை செய்யக்கூடியவர்கள் என்று நீங்கள் யாரையாவது கருதினால், அவர் இனி அவ்வாறு செய்யமாட்டார் என்ற ஒரு நம்பிக்கை உங்களுக்கு வரும் வரைக்கும் அவரது வீட்டிலோ அல்லது பொதுவான ஓர் இடத்திலோ வைத்து அவரை அவதானித்தல் அவசியம். அவரது குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் போன்றோரின் துணையோடு அவரை அவதானிக்கவும். அவருக்கு பெரும்பாலும் வைத்திய சிகிச்சை தேவைப்படும். அவருக்கு உளவளத்துணை அளிக்கத் தொடங்கலாம். இப்படியானவர்களை, இயன்றளவு விரைவாக அவர்கள் முன்னர் பார்த்து வந்த தொழில்துறைகளுக்கோ அல்லது படிப்பவராயின் பாடசாலைக்கோ போய், தங்கள் தங்கள் கருமங்களில் ஈடுபடச் செய்வது நல்லது. அவர்கள் மனச்சோர்வு நோயின் தாக்கத்தினால்தான் இப்படி இருக்கிறார்கள் என்றும், அந்நோயிலிருந்து மீண்டதும் அவர்கள் பழைய நிலமைக்கு திரும்பி விடுவார்கள் என்றும் அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் நம்பிக்கையூட்டவும். சித்திரவதை, கற்பழிப்புப் போன்றவற்றிற்கு ஆளானவர்கள் இலகுவில் மனச்சோர்வடைந்து, தற்கொலை செய்து கொள்ளலாம். அது போல புற்றுநோய், எயிட்ஸ் போன்ற மாற்ற முடியாத நோய்கள் ஏற்பட்ட ஒருவரும் இலகுவில் நம்பிக்கையிழந்து தற்கொலை செய்யும் நிலமைக்கு வந்து விடலாம். இப்படியான நிலமைகளில், அவரை ஓர் அனுபவமிக்க உளவளத் துணையாளருடன் தொடர்புபடுத்வும். அத்துடன் அவருக்குத் தேவையான குடும்ப, சமூதாய ஆதரவையும் திரட்டிக்கொடுக்கலாம். வைத்தியசாலைகளில் அனைத்து விடுதிகளிலும் அனுமதிக்கப்படும் எல்லாவிதமான நோயாளியிலும் தற்கொலை எண்ணத்தை அறிவது பயனுடையது.

## யுகதாரினி செசிலியாவின் 'கரையைத்தேடு' கவிதைநூல் வெளியீட்டுவிழா.



வீரமுனை பெண் எழுத்தாளர் யுகதாரினி செசிலியா சோமசுந்தரத்தின் "கரையைத்தேடு" எனும் கன்னிக் கவிதைநூல் வெளியீட்டுவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் வீரமுனை இ.கி.மி. பாடசாலையில் நடைபெற்றது.

வீரமுனை ஐங்கரன் கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் அதன் உபதலைவர் அ.சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர் கலந்து சிறப்பித்தார்.விசேட அதிதிகளாக நீதியமைச்சின் உதவிச்செயலாளர் எ.மன்சூர், சம்மாந்துறை பிரதேசசெயலாளர் எஸ். எல்எம்.ஹனிபா, மாவட்ட இந்துகலாசார உத்தியோகத்தர் என்.பிரதாப் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.

வீரமுனையைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் யுகதாரினி செசிலியா சோமசுந்தரத்தின் அச்சுருப்பெறும் முதல்நூல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

(வி.ரி.சகாதேவராஜா காரைதீவு நிருபர் )

## குறுக்கெழுத்துப் போட்டி இல:-10 இன் விடைகள்

அரங்கம் இரா. தவராஜா.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தூ | 2 து | 3 வ | ன் | ■ | 4 வ | தை |
| 5 ம | ரு | ள் | ■ | ■ | ரா | ■ |
| ணி | ■ | ளு | ■ | 6 அ | க | தி |
| ■ | 7 அ | வ | 8 ச | ர | ம் | ■ |
| 9 உ | வ | ர் | ம | ண் | ■ | 10 அ |
| 11 பு | ல் | ■ | நி | ■ | 12 மா | டி |
| ப் | ■ | 13 ம | லை | வா | சி | ■ |

**சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிஸ்டசாலி:-**

01. அ.செபமாலை (கோட்டமுனை)
02. சாஹிரா பானு லியாவுதீன் (புத்தளம்)
03. வேல்நாயகம் இராஜேந்திரன் (காரைதீவு)

-- இவருக்குரிய பரிசுப் பணம் அனுப்பிவைக்கப்படும்.
-- இப் போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு அரங்கம் பத்திரிகையின் நன்றிகள்.



தொடர்ச்சி...

## திருக்குறள் இன்பம் - 8

உள்ளேயே வாழ்ந்து கொண்டிருப்பதாக அவள் நினைக்கிறாள். கண்களைத் திறந்தாலும் எதிரே அவந்தான் தெரிகிறான், மூடினாலும் உள்ளே அவனே தெரிகிறான். இப்படியிருக்கும்போது, கண்களுக்கு நான் மைதீட்டினால், மைதீட்டும் அந்தச் சிறிய நேரத்தில் அவன் தன் கண்களை விட்டு மறைந்து விடுவானோ என்று அவள் அஞ்சுகின்றாள். அதாவது, கண்களுக்கு மைதீட்டுகின்ற நேரத்தில் கண்கள் அதிலே கவனம் செலுத்திக்கொள்ள வேண்டியிருப்பதால், அந்த நேரத்தில், காதலரின் முகம் தெரியாமல் போய்விடுமே என்று அவள் கவலைப்படுகின்றாள். அதனால், இனிக் கண்களுக்கு மை தீட்டுவதில்லை, எக்கணமும் இடையூறின்றி அவனின் உருவத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதில் உள்ள சுகத்தை இழப்பதில்லை என்று அவள் முடிவு செய்கிறாள். காதல் உணர்வு பெண்களை எப்படியெல்லாம் நினைக்க வைக்கிறது என்பதை அறியும்போது, வியப்பாக இருக்கிறது!

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து (1127)

நான் எனது கண்களுக்கு மைதீட்டிக்கொள்வதில்லை. ஏனென்றால், நான் மையிடும் அந்த நேரத்தில் என் கண்களினுள்ளே வாழ்ந்துகொண்டிருக்கும் என் காதலர் கண்களைவிட்டு மறைந்து விடுவாரோ என்று நினைப்பதால் என்பது குறளின் கருத்து.

உணவின் சூடு, கணவருக்குக் கேடு!

---

காதலிக்கும் பெண்கள் பொதுவாகவே தங்கள் காதலர்களின் மனதைக் காயப்படுதாமல் நடந்துகொள்வதில் மிகவும் அவதானமாக இருப்பார்கள். ஆண்களும் அப்படித்தான் என்றாலும், இந்தவிடயத்தில் பெண்களுக்குத்தான் அக்கறை அதிகம். ஐயையோ அவர் அப்படி நினைத்துவிடுவாரோ, இப்படி நினைத்துவிடுவாரோ என்றெல்லாம், சின்னச் சின்ன விடயங்களுக்கெல்லாம் மடத்தனமாகக்கூடக் கவலைப்படுவார்கள். அப்படித்தான் ஒருத்தியின் அப்பாவித்தனமான செயல் அவளது காதலின் ஆழத்தை வெளிப்படுத்தும் விதமாக உள்ளதை அடுத்துவரும் குறள் சொல்கிறது. அவளின் நெஞ்சிலே காதலன் இருக்கிறான். உணவு உண்ணும்போது அந்த உணவு நெஞ்சுவழியாகத்தானே உள்ளே வயிற்றினுள் செல்கிறது? எனவே உண்ணும் உணவு சூடாக இருந்தால், நெஞ்சிலே உள்ள தன் காதலனை அது சுட்டுவிடுமே என்று கவலைப்படுகிறாள். அதனால், இப்போதெல்லாம் அவள் சூடான எந்த உணவுகளையும் உண்பதே இல்லையாம். இது நமக்கு வேடிக்கையாகத் தெரியும். ஆனால், காதலிக்கும் பெண்கள் காலங்காலமாக இப்படித்தான் (பைத்தியங்களைப்போல) இருந்திருக்கிறாகள் என்பதற்கு இந்தக் குறளே சான்றாக உள்ளது.

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து.(1128)

என் நெஞ்சிலே எப்போதும் எனது காதலர் நிறைந்து வாழ்கின்றார். அதனால், சூடான உணவுகளை நான் உண்ணும்போது அவை நெஞ்சிலேயிருக்கும் என் காதலரின் மேல்பட்டுவிடுமே, அவரைச் சுட்டுவிடுமே என்று நினைத்து, நான் சூடான உணவுகளை உண்பதற்கு அஞ்சுகிறேன், என்பது குறளின் பொருள்.

உள்ளத்தில் உள்ளார்! ஊரவர் அறிவரோ?

---

இன்னொருத்தியின் நிலைமை மனதில் நான் இருப்பது, மற்றவர்க்குத் தெரியுமோ?

---

அவளின் கணவன் இப்போது அவளுடன் இல்லை. அவனது தொழில் காரணமாக வேறு ஊருக்கோ அல்லது வேறு நாட்டுக்கோ போயிருக்கிறான். அவன் வரும்வரையில் வழிமேல் விழிவைத்து அவள் காத்திருக்கிறாள். கண்களை இமைத்தால் கண்களை விட்டு அவனது உருவம் மறைந்துவிடுமோ என்ற கவலையால் அவள் இமை மூடாமல், தூங்காமல் அவனை எதிர்பார்த்திருக்கிறாள். அதனால் தூங்காத கண்கள் களையிழந்தன. முகம் பொலிவிழந்தது. உடல் நலிவடைந்தது. இதையெல்லாம் கவனித்த ஊர்மக்கள், அவளது கணவனுக்குத் அவள்மீது அன்பில்லை என்றும், அதனால்தான் பிரிந்திருக்கிறான் என்றும் அவனைக் குறை சொல்கிறார்கள், குற்றம் சாட்டுகின்றார்கள். அவர் தன்னில் அன்பாகத்தான் இருக்கிறார் என்றும் அந்த ஊர் மக்கள் ஏந்தான் இப்படியெல்லாம் நினைக்கிறார்களோ என்றும் எண்ணிச் சலித்துக்கொள்கின்றாள் அவள்.

இமைப்பின் கரப்பாக்கு அறிவல்
அனைத்திற்கே ஏதிலர் என்னும் இவ் வூர்
(1129)

நான் கண் இமைத்தால், எனது கண்களின் உள்ளே இருக்கும் என் காதலர் மறைந்துவிடுவாரோ என்று நினைத்து கண்ணிமைக்காமல், தூங்காது இருக்கிறேன். தூக்கமின்மையால் வாடியிருக்கும் என்னைப்பார்க்கும் ஊர் மக்கள், இதற்குக் காரணமான எனது காதலர் என்னில் அன்பு இல்லாதவர் என்று சொல்கின்றார்கள், என்பது குறள் தரும் பொருள்.

உள்ளத்தில் உள்ளார்! ஊரவர் அறிவரோ?

---

இன்னொருத்தியின் நிலைமை வித்தியாசமானது. அவளும் அவளது கணவனும் உள்ளத்தால் பிணைந்து, திருமணத்தில் இணைந்தவர்கள். இப்போது இருவருக்கும் இடையில் சிறிது மனத்தாங்கல். அது ஊடல் என்ற நிலையையும் கடந்து விட்டது. அதனால் அவன் அவளைப் பிரிந்து வாழ்கின்றான். அவள் அவனை வெறுக்கவில்லை. அவன் உடலால் பிரிந்திருந்தாலும், அவளின் உள்ளத்தில் நிறைந்திருக்கிறான். இன்னும் அவனையே நினைத்து அவள் உருகிக்கொண்டிருக்கிறாள். தன்னை விரும்பி மணந்த அவன் திரும்பி வருவான் என்று அவள் நம்புகிறாள். "ஆனால், எங்கள் அன்பின் ஆழத்தை அறியாத ஊர்மக்கள், என்னில் அவருக்கு அன்பே இல்லை என்றும் அதனால்தான் என்னைப் பிரிந்திருக்கிறார் என்றும் அவரைப் பழித்துரைக்கிறார்களே!"

என்று அவனின் பிரிவால் வரும் துன்பம் ஒருபுறமும், ஊர்மக்களின் பழிச்சொல் தரும் துன்பம் மறுபுறமுமாக இருதலைக் கொள்ளி எறும்பைப் போல அவளின் உள்ளம் வேதனையில் வெந்து துடிக்கிறது. இந்தக்காட்சியை வெளிப்படுத்துகிறது அடுத்த குறள்.

உவந்து உறைவர் உள்ளத்துள் என்றும்
இகந்து உறைவர்
ஏதிலர் என்னும் இவ் ஊர் (1130)

எனது காதலர் இப்போது என்னருகே இல்லாவிட்டாலும், என்னை மிகவும் விரும்பியவராக என் நெஞ்சிலே குடியிருக்கிறார். இதனை அறியாத இவ்வூர் மக்கள், என்னிலே அன்பில்லாமல் என்னைப் பிரிந்து வாழ்கின்றார் என்று அவரைப் பழிக்கின்றார்கள், என்பது குறளின் நேரடியான கருத்தாகும்.

(தொடரும்)

தொடர்ச்சி...

## காலம்தோறும் உயிர்க்கும் இராவணன் மற்றவரை உயிர்ப்பிக்கும் இராவணன்

2005, 2010, 2012, 2013 களில் இந் நாடகத்தைப் போட்டபோது இராவணனின் பழைய அலங்காரத்தையும் மாற்றி இருந்தோம். மட்டக்களப்பு கூத்து உடுப்புகளை அடிப்படையாக வைத்து அதனை இன்னும் செம்மையாக்கி, நவீனப்படுத்தியுமிருந்தோம்

2012, 2013 இல் நானே இராவணனுக்கு வேடமிட்டேன்.

2017 இல் அண்மையில் நான் இராவணை ஒரு ஞானியாக அறிஞனாக, பழுத்து முதிர்ந்த கனியாக மாற்ற எண்ணினேன்.

அவனுக்கு நரைத்த ஜடாமுடி, நரைத்த மீசை, நரைத்த புருவம். ஆனால் ஒளி வீசும் கண்கள், ரௌத்திர அதாவது கோபம் மிகுந்த முகமல்ல எப்போதும் புன்னகை தவழும் முகம். கனிவான பார்வை எனக் கற்பனை செய்து என் ஒப்பனையாளரிடம் என் கருத்தைக் கூறினேன். அவர் அப்படியே என்னை மாற்றினார். கோபம் இருந்தாலும் அதில் ஒரு நிதானமும் பக்குவமும் இருந்ததாக அப்பாத்திரத்தை உருவாக்க எண்ணினேன். அந்த இராவணையே மேடையிற் கொணர்ந்தேன். 1964 இல் எனது இருபத்தியொராவது வயதில் இராவணனை வேடமிட்ட நான் 2017 இல் எனது எழுபத்தி ஐந்தாவது வயதில் மீண்டும் இராவண வேடமிடுகிறேன்.

இந்த இராவணன் என்னைப் படாதபாடுபடுத்துகிறான். அவன் உள்மனம் யாரும் இதுவரை அறியவில்லை எனக்கூறுகிறான். ஒரு பெரும் சாம்ராஜ்யத்தை உருவாக்குகையில் அவன் எதிர்கொண்ட சவால்கள், அவனது, குடும்பபாசம், எதிர்பாராத விதமாக தன் தங்கையின் மூக்கு, முலை அறுபட்டமையால் வந்த சீற்றம், பதிலுக்கு தான் சீதையைக் கவர்ந்து வந்து அவளைத் தீண்டாமல் சிறைவைத்தமை, தான் செய்த பிழைக்கு மன்னிப்புக் கேட்காமல் ராமன் தன்னோடு அறத்துக்கு மாறாகப் போர்புரிந்தமை தன்சுயமரியாதையும் அறத்தையும் காக்கத்தான் போர் அறை கூவலை எதிர்கொண்டமை, அதனால் குடும்பத்துள் எழுந்த உணர்ச்சி பிரச்சனைகளைத்தான் எதிர்கொண்டமை, அவன் மனம்பட்டபாடு அவனுடைய தம்பிபாசம் தனயன் பாசம், படைவீரர் மீது கொண்ட பாசம்.

இவை அனைத்தையும் விளங்கிக் கொள்ளாமல் இருந்த அவன் மனைவியின், சுற்றத்தின் அப்பாவித்தனம். அவர்களின் அறியாமை எல்லாவற்றையும் கடைசிபோருக்கு புறப்பட முன் அன்றைய அவனது கடைசி இரவில் இராவணன் தனக்குள் நினைக்கின்றான். அந்த நினைவுகளை அழகாகக் கூற இப்போது ஒரு புது வால்மீகி அல்லது கம்பன் தேடுகிறான். கடலைப் பூனை நக்கியது போல "வால்மீகி இராமயணத்தைத்" தான் நக்கி தனது கம்பராமாயணத்தை படைத்ததாக கம்பன் கூறுகிறான். அவன் படைத்த இராவணன் வேறு. கம்பன் எனும் அந்த்ப்பூனை நக்கிய சிந்திய பாலிலிருந்து ஒரு இராவணாயத்தை நாடகமாக்க நினைக்கிறேன். முதலில் ஒரு தனி நடிப்பு முறையின் மூலம் இராவணன் இறுதிப்போருக்குப் புறப்படமுன் அவனின் அகமன உணர்வுகளை, மனப்போராட்டங்களைக் கொணர எண்ணுகிறேன். இந்த இராவண பாத்திரம் என்னோடு இணைந்து விட்ட ஒன்று.

1964 இலிருந்து இற்றைவரை என்னோடு பயணம் செய்கின்ற பாத்திரம் 1964 இல் ஒரு இராவணன், 2000 இல் இன்னுமோர் இராவணன், 2005 இல் மற்றுமோர் இராவணன், 2010 இல் ஓர் புதிய இராவணன், 2014 இல் வேறொரு இராவணன், 2017 இல் தோற்றத்தில் முற்றிலும் புதியதோர் இராவணன், இம்முறை தோற்றம் கொண்ட இராவணன் முற்றிலும் ஓர் புதிய இராவணன், வயது முதிர்ந்த இராவணன் இவன்.

இப்படி காலம் தோறும் மாறி வந்துள்ளான் நமது இராவணன். பலரால் உருமாற்றமும் குணாம்ச மாற்றங்களும் பெற்றுள்ளான்.

புலவர்கள் இவனைச் சொல்லில் படைத்தனர், ஓவியர்கள் இவனை ஓவியங்களிற் கொணர்ந்தனர். சிற்பிகள் இவனைச் சிற்பத்தில் வடித்தனர், மேடை சினிமாக் கலைஞர்கள் இவனை அசையும் உருவாக்கினர். வாழையடி வாழையென வரும் இம்மரபில் நானும் ஓர் சிறு துளி. மிகச் சிறு துளி.

இந்த இராவணன் இன்னும் இன்னும் எத்தனையோ உருவங்களை இன்னும் பலரால் எடுக்கவும் கூடும். ஏனெனில் இராவணன் என்ற தொன்மம், இராவணன் என்ற பிம்பம் இராவணன் என்ற படிமம் பல நூற்றண்டுகளாகத் தமிழர்களோடும் பண்பாட்டோடு இணைந்து விட்ட ஒன்று காலம் தோறும் அவன் உயிர்ப்பான்

தன் உயிர்ப்பில் மற்றவரை உயிர்ப்பிப்பான்

## மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி



மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் உரோமை, உர்பானியா பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் புனித யோசப்வாஸ் இறையியல் கல்லூரியானது மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதிவந்.கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்களால் 2018 செப்டம்பர் 8ம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கொழும்பு, உயர் மறைமாவட்ட புனித ஜோசப்வாஸ் தேவதர்ம நிகேதனய இயக்குனர் அருட்தந்தை. தயா செல்டன் வெலிக்கடஆராச்சி அடிகளார் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். ஆரம்பத்தில் கல்லூரிக்கான பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டதுடன் தொடர்ந்து நூலகம், இரு விரிவுரை கூடங்கள், அலுவலகம், கேட்போர்கூடம் ஆகியன திறந்து வைக்கப்பட்டன. இக்கல்லூரியின் இயக்குனராக அருட்தந்தை.ஜோர்ஜ் ஜீவராஜ் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

நேர்மையின் புகலிடம்
இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு – 05
Email: help@tisrilanka.org Web: www.tisrilanka.org

ஊழலை ஒழிப்போம்!
அதற்கு எதிராக குரல்கொடுப்போம்
தமிழிலும் இலவச சட்ட ஆலோசனை பெற

அழையுங்கள் 011 2 501 503
மாத்தறை – 041 22 33 522 – வவுனியா – 024 222 76 76

MEGAM AGENCY
Import, Export Clearing Forwarding & Customs
Tel/Fax 2445383 Hotline (+94 77 773 2226)
megamagency@yahoo.com
#61,A.G HINNI APPUHAMY MW, COLOMBO -13

- உங்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விடயங்களை / சுங்கப் பணிகளை திறம்படச் செய்து முடிக்க நாடுங்கள்..
- உங்கள் தனிப்பட்ட பொதிகள் மற்றும் கொள்கலன்களை சுங்கத்தில் இருந்து பெற்று உங்கள் வீட்டு வாசலில் ஒப்படைப்போம்.
- கொழும்பில் இருந்து வீடுகள் மற்றும் கம்பனி பொருட்களை இலங்கையின் அனைத்து இடங்களுக்கும் மாற்றிகொடுக்க நம்பிக்கையான இடம்.



அரங்கம் செய்திகள்
விளம்பரங்களுக்கு
தொடர்பு : 071 399 909 1
arangamnews@gmail.com

FCC SUPER MALL
4 Wings for Uplift Your life
ஒரே கூரையின் கீழ் வாழ்வின் அத்தியாவசிய பொருட் தேவையை பூர்த்தி செய்ய அன்புடன் வரவேற்கின்றோம்.
PHARMACY – TIP TOP HEALTH CARE
SUPER MARKET – CITY CENTRE
BUDGET SHOP – CASH & CARRY – Young Forever
CAFETERIA – FCC Cafe




Free Delivery (City Limits)
076 821 3634 / 065 2222 722
** Condition applies

இல.16, மத்திய வீதி, மட்டக்களப்பு. TP: 0652222722, Hotline: 0772072722

Printed and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa